வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 07.01.2023 சனிக்கிழமை | இதழ் : 28 | பக்கங்கள் : 16




## ஐரோப்பா செல்ல முயன்ற முல்லை. இளைஞர் மரணம்?

முல்லைத்தீவு, ஜன. 07


சட்டவிரோதமாக ஐரோப்பாவுக்குள் நுழைய முயன்ற முல்லைத்தீவு இளைஞன் ஒருவர் பெலாரஸ்- போலந்து எல்லையில் உயிரிழந்தார் என்று கூறப்படுகிறது.

இளைஞனின் சட்டவிரோத பயண முகவர் இந்த தகவலை குடும்பத்

15

## இனப் பிரச்னைக்கான தீர்வு பேச்சு; முஸ்லிம்களையும் இணையுங்கள்!

### ரவூப் ஹக்கீம் வலியுறுத்து



கொழும்பு, ஜன. 07

இனப் பிரச்சனைக்கு அனைவரும் இணங்கக்கூடிய நல்லதொரு தீர்வை ஜனாதிபதி வழங்குவாராக இருந்தால் அதில் முஸ்லிம் தரப்பையும் இணைத்துகொள்ள வேண்டும் என்று சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், இனப் பிரச்னை தொடர்பான பேச்சுகள் குறித்து முஸ்லிம்கள் மத்தியில் விஷமத்தனமான பிரசாரங்கள்

15



மார்கழி திருவாதிரை தினமான நேற்று பிரசித்தி பெற்ற நல்லூர் சிவன் ஆலயத்தில் தேர்த் திருவிழா மிகவும் பக்திபூர்வமாக நடைபெற்றது. படம் – ஐ. சிவசாந்தன்

# உள்ளூராட்சி தேர்தலை தடுக்க சாத்தியமில்லை!

### தேர்தல்கள் ஆணைக்குழுவினர் ஜனாதிபதிக்கு நேரில் தெரிவிப்பு!

கொழும்பு, ஜனவரி 07

**அரசமைப்பு அல்லது நீதிமன்ற நடவடிக்கை தவிர்ந்த வேறு நடவடிக்கைகள் ஊடாக உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை தடுப்பதற்கு சாத்தியம் இல்லை என்று தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளனர்.**

15

## யாழ். மாநகர சபைக்கு மீண்டும் முதல்வர் தெரிவு!

### வர்த்தமானி அறிவிப்பு வெளியீடு

யாழ்ப்பாணம், ஜன. 07

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு எதிர்வரும் 19ஆம் திகதி முதல்வர் தெரிவு இடம்பெறும் என்று வர்த்தமானி அறிவிப்பு வெளியாகியுள்ளது.

யாழ். மாநகர சபையின் 2023ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டம் தோற்கடிக்கப்பட்டது. இரண்டாவது தடவையாக வரவு - செலவு திட்டத்தை சமர்ப்பிக்காத நிலையில், முதல்வர் மணிவண்ணன் பத

15

## ஈஸ்டர் தாக்குதல்:
## அடிப்படை உரிமை மீறல் வழக்கு; எதிர்வரும் 12ஆம் திகதி தீர்ப்பு!

கொழும்பு, ஜன. 07

போதுமான உளவுத் தகவல்கள் இருந்தும் உயிர்த்த ஞாயிறு தின பயங்கரவாத தாக்குதல்களை தடுக்கத் தவறியதன் மூலம் தமது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளன என்று கூறி தாக்கல் செய்யப்பட்டுள்ள 12 அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் மீதான தீர்ப்பு எதிர்வரும் 12ஆம் திகதி வியாழக்கிழமை வழங்கப்படும் என்று உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இந்த அடிப்

15

## ஒரு நிலைப்பாட்டில் ஒன்றாக வாருங்கள்!

### தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு ஜனாதிபதி ரணில் அறிவுரை!

கொழும்பு, ஜன. 07

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் வெவ்வேறான நான்கு நிலைப்பாடுகளை கொண்டிருக்காமல், பெரும்பான்மையான ஆதரவுடன் ஒரு நிலைப்பாட்டின் அடிப்படையில் செயல்படுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களிடம் அறிவுறுத்தியுள்ளார்.

தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் மாலை ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

இந்த சந்திப்பில் பிரதமர் தினேஷ் குணவர்தன, சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்னம்,

15

## 2 இலட்சம் பேர் புதிய வாக்காளர்!

கொழும்பு, ஜன. 07

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் வாக்களிப்பதற்கு 1 கோடியே 68 இலட்சம் பேர் தகுதி பெற்றுள்ளார்கள். இதில், 2 இலட்சம் பேர் முதன்முறையாக வாக்களிக்க தகுதி பெற்றுள்ளார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் 10 ஆம் திகதிக்குள் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு உத்தேசித்துள்ளது.

உள்ளூராட்சி

15

## பிரான்ஸ் சென்ற 53 பேர் ரியூனியன் தீவில்!

கொழும்பு, ஜன. 07

பிரான்ஸூக்கு அழைத்து செல்வதாக கூறி போலி முகவர்களால் அழைத்துச் செல்லப்பட்ட 53 இலங்கை தமிழர்கள் ரியூனியன் தீவில் இறக்கி விடப்பட்டுள்ளனர்.

பிரான்ஸின் ஒரு மாகாணமாக உள்ள ரியூனியன் தீவில் இறக்கி விடப்பட்டவர்களில் மூவரை பிரான்ஸ் அனுமதித்துள்ளது. இந் நிலையில், ஏனையவர்களை குடியேற்ற அந்நாடு மறுத்துவிட்டதாகக் கூறப்படுகின்றது.

இது தொடர்பில் ரியூனியன் தீவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் தமது விடயத்தில் சர்வதேச அமைப்புகள் தலையிட்டு வேறு நாடுகளில் குடியேற்ற வேண்டும் என்றும் தாம் இலங்கை செல்ல விரும்பவில்லை எனவும் காணொலி மூலமாக பதிவுகளை வெளியிட்டுள்ளனர்.

## இந்தியா, சீனா, தாய்லாந்துடன் மீண்டும் வர்த்தக ஒப்பந்தங்கள்

கொழும்பு, ஜன. 07

சுமார் 4 வருடங்களுக்கு பின்னர், இந்தியா, சீனா மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளுடன் வர்த்தக ஒப்பந்தங்கள் தொடர்பான பேச்சுகளை இலங்கை ஆரம்பிக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை தற்போது மோசமான நிதி நெருக்கடியில் உள்ளது. கடுமையான அந்நியச் செலாவணி பற்றாக்குறையால் இது ஏற்பட்

15

## இம்மாதம் இலங்கை வருகிறார் இந்திய வெளியுறவு அமைச்சர்!



கொழும்பு, ஜன. 07

இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் இருதரப்பு பேச்சுவார்த்தைகளுக்காக இம்மாதம் இரண்டு நாள் விஜயமாக இலங்கை வரவுள்ளார்.

இருப்பினும், அவ

15

## 13ஐ முழுமையாக அமுலாக்க வேண்டும்!

### ஜனாதிபதியிடம் டக்ளஸ் வலியுறுத்து

கொழும்பு, ஜன. 07

அரசமைப்பின் 13ஆவது திருத்த சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கு உரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்

15

## இப்படியும் நடக்கிறது...!

யாழ்ப்பாண அரச அதிபராக இருந்த க. மகேசன் பதவி உயர்வுடன் கொழும்புக்கு சென்றது வாசகர்கள் அறிந்திருப் பார்கள்.

ஆனால், அவர் ஏதோ பலவந்தமாக இடமாற்றப்பட விருப்பதாகவே முதலில் செய்திகள் வந்தன. ஆனால், அவர் பதவி உயர்வுடன் கொழும்பு சென்றார். அவர் இடமாற்றம் செய்யப்படவிருப்பதாக செய்திகள் வந்தபோது வடக்கின் மற்றுமோர் அரச அதிபரும் இடமாற்றப்படவுள்ளாரென செய்திகள் வந்தன.

ஆனால், அவர் யாழ்ப்பாணத்துக்கு வரவிருப்பதாக பின்னர் தெரியவந்தது. அதுகூட அவருக்கு ஒரு பதவி உயர்வு போன்றதுதான். ஆனால், அவர் நியமிக்கப்படவிருப்பதை அறிந்த இலங்கை சிவசேனை அமைப்பினர் நால்வர் யாழ்ப் பாண செயலகத்துக்கு முன்னால் போராட்டம் நடத்தினார்கள்.

புதிதாக நியமிக்கப்படவிருப்பதாகக் கூறப்பட்ட அரச அதிபர், இந்து மதத்திலிருந்து கிறிஸ்தவ மதத்துக்கு மதம் மாறிய ஒருவர் என்றும், 'சிவத்துரோகிகள் தமிழினத் துரோகிகளே' என்று கோஷம் எழுப்பியவாறு இலங்கை சிவசேனை அமைப்பைச் சேர்ந்தவர்கள் தமது போராட்டத்தை நடத்தினார்கள்.

அந்தக் கோரிக்கையுடன் ஊர்க்குருவிக்கு உடன்பாடு உண்டா இல்லையா என்பதல்ல நாம் சொல்ல வருவது. இலங்கை சிவசேனை அமைப்பு இந்துக்கள் மத்தியில் நடக்கும் மதமாற்ற முயற்சிகளுக்கு எதிராகத் தொடர்ந்து போராடி வருகின்றது.

ஒருவர் தானாக விரும்பி எந்த மதத்துக்கு சென்றாலும் அதனை கேள்விக்கு உட்படுத்த எவருக்கும் உரிமையில்லைத் தான். ஆனால், இன்றைய பொருளாதார நெருக்கடி மற்றும் பிற காரணங்களால் அல்லல்படும் அப்பாவிகளை இலக்கு வைத்து - அவர்களின் தேவைகளை இலக்குவைத்து - பல் வேறு உறுதிமொழிகளை வழங்கி அவர்களை மதமாற்றும் முயற்சிகளையே சிவசேனை எதிர்த்து வருவதாகக் கூறுகின்றது.

இன்று யாழ்ப்பாணத்தில் கிறிஸ்தவ சபைகள் கிராமம் தோறும் பல்கிப் பெருகி வருகின்றன. அது கத்தோலிக்க மதத்துக்கும் நெருக்கடியான ஒன்றுதான். 'இப்படியே போனால் கத்தோலிக்க தேவாலயங்களும் எதிர்காலத்தில் பக்தர்கள் இல்லாமல் அல்லல்படவேண்டிவரும்' என்று சில கத்தோலிக்கர்களே இந்த ஊர்க்குருவியிடம் கவலை வெளியிட்டிருக்கின்றனர்.

யாழ்ப்பாண அரச அதிபராக நியமிக்கபடவிருந்ததாகக் கூறப்படும் அரச அதிபரும் இந்துவாக இருந்து இதுபோன்ற கிறிஸ்தவ சபை ஒன்றின் பக்தையாக மாறியவர் என்றும் அவர் அரச அதிபராக நியமிக்கப்பட்டால், அவர் இந்துக் களை மதமாற்றும் முயற்சியில் ஈடுபடுவார் என்றும் சிவ சேனை அவருக்கு எதிராக போராடியது நியாயமானது என்று இந்தப் பத்தி வாதிடவில்லை.

இந்தப் பத்தியின் நோக்கம் அவர்களின் போராட்டம் சரியானது என்பதல்ல, இப்போது அரச அதிபரின் நியமனம் இடைநிறுத்தப்பட்டிருப்பதாக தெரியவருகின்றது. அதற்கு அந்தப் போராட்டமே காரணம் என்று சிவசேனை நம்புவதாகத் தெரிகின்றது.

ஏற்கனவே அவரை யாழ்ப்பாணத்துக்கு நியமிப்பதற்கு மாவட்டத்தின் ஒரேயோர் அமைச்சரான அரசியல்வாதியும் சம்மதம் தெரிவித்திருந்தபோதிலும், இப்போது அவரின் நியமனம் இழுபறியில் இருப்பதாக கொழும்பில் விசயமறிந்த மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஆக, இலங்கை சிவசேனை என்ற ஓர் அமைப்பு தமது கோரிக்கையை வலியுறுத்தி போராட்டம் நடத்தி, அதுவும் செயலகத்துக்கு முன்னால் நான்குபேர் நின்று கொடிபிடித்ததால் அவர்கள் விரும்பியவாறு அரச அதிபர் நியமனம் தடைப்பட்டிருக்கின்றது என்றால், இதுபோன்ற எத்தனையோ பிரச்னைகளை எதிர்கொள்ளும் தமிழ் மக்களின் பிரச்னைகளுக்கு தீர்வுகாண சரியான போராட்டங்களையும் - செய்யவேண்டிய நேரத்தில் செய்யவேண்டியவாறு செய்தால் வெற்றியடையலாம் என்பதையே சிவசேனையின் இந்தப் போராட்டம் புலப்படுத்தியிருக்கின்றது.

இந்த விவகாரத்தை இந்தப் பத்தியில் எழுதியதன் நோக்கமே இதனை சுட்டிக்காட்டுவதற்காகவே.

அதற்காக ஒருவர் தனது சுய விருப்பத்தின் பேரில் கிறிஸ்தவராக மாறியவர் என்பதால் அவரை அரச அதிபராக நியமிக்கக்கூடாது என்ற போராட்டம் சரியானது என்று சொல்வதற்காக அல்ல.

இந்த விடயம் குறித்து நண்பர் ஒருவருடன் பேசிக்கொண்டிருந்தபோது அவர் சொன்னார், 'நமது எம். பிக்கள் ஒரு கோரிக்கையை முன்வைத்து சாகும்வரை உண்ணாவிரத போராட்டத்தை நடத்தினால் எப்படியிருக்கும்' என்று.

**- ஊர்க்குருவி**

# ஐ. தே. கவுடன் கூட்டணி அமைத்தாலும் பெரமுனவின் தனித்துவம் பாதிக்காது!

## சாகர காரியவசம் சொல்கிறார்

கொழும்பு, ஜன. 07

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டணி அமைத்து போட்டியிடுவது தொடர்பில் இதுவரை உத்தியோகபூர்வமான தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை. பொதுஜன பெரமுனவில் இருந்து விலகிச் சென்றவர்கள் மீண்டும் கட்சியுடன் இணைந்து கொள்ள அழைப்பு விடுத்துள்ளோம் என சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு,

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை பிற்போட வேண்டிய தேவை சிறீ லங்கா பொதுஜன பெரமுனவுக்கு கிடையாது. வெற்றியோ, தோல்வியோ தேர்தலை எதிர்கொள்வோம். தேர்தல் உரிய காலத்தில் நடத்தப்பட வேண்டும் என்பது கட்சியின் அடிப்படை கொள்கையாக உள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான கட்டுப்பணம் செலுத்தும் நடவடிக்கைகள் களுத்துறையில் ஆரம்பிக்கப்பட்டது. பொதுஜன பெரமுனவின் தேர்தல் பிரசார கூட்டம் களுத்துறை நகரில் இருந்து ஆரம்பிக்கப்பட்டது. உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான அடுத்தக்கட்ட தேர்தல் நடவடிக்கைகளை அநுராதபுர நகரில் இருந்து ஆரம்பிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

சிறீ லங்கா பொதுஜன பெரமுன தலைமையில் தாமரை மொட்டுச் சின்னத்தை முன்னிலைப்படுத்தி அரசியல் கூட்டணியை அமைக்க ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது. சிறீ லங்கா பொதுஜன பெரும்பாலான தேர்தல் தொகுதிகளில் மொட்டு சின்னத்தில் போட்டியிடும். பரந்துபட்ட அரசியல் கூட்டணி அமைப்பது தொடர்பில் பெரும்பாலான அரசியல் கட்சிகளுடன் இடம்பெற்ற பேச்சு சாதகமாக நிறைவுபெற்றுள்ளது.

சிறீ லங்கா சுதந்திர பொதுஜன பெரமுன கூட்டணியில் ஒன்றிணைந்த அரசியல் கட்சிகளை ஒன்றிணைத்து மீண்டும் புதிய நாமத்தில் அரசியல் கூட்டணி அமைக்கப்படும். ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டணி அமைப்பது தொடர்பில் இது வரை உத்தியோகப்பூர்வமான தீர்மானங்கள் ஏதும் எடுக்கப்படவில்லை.

இரு தரப்பு பேச்சுகள் இடம்பெற்றன. ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டணிமைக்கும் போது பொதுஜன பெரமுனவின் தனித்துவத்தை விட்டுக் கொடுக்க கூடாது என பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் உறுதியாக வலியுறுத்தியுள்ளார்கள் - என்றார்.

# யாழ்ப்பாண சர்வதேச திரைப்பட விழா யாழ்ப்பாணத்தவர்களுக்கு உரியதல்ல!

## இயக்குநர் அனோமா பொன்சேகா

யாழ்ப்பாணம், ஜன. 07

யாழ்ப்பாண சர்வதேச திரைப்பட விழாவானது யாழ்ப்பாணத்தவர் களுக்குரியது இல்லை என இயக்குநர் அனோமா பொன்சேகா தெரிவித்துள்ளார்.

"யாழ்ப்பாண சர்வதேச திரைப்பட விழா" எனும் பெயரில் யாழ்ப்பாணத்தில் கடந்த 2ஆம் திகதி முதல் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை மதியம் யாழ். பல்கலைக்கழக கலைலாசபதி கலையரங்கில், நடைபெற்ற" இலங்கை தமிழ் சினிமா நேற்று, இன்று, நாளை " எனும் தலைப்பில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

அதில் கலந்து கொண்ட ஓர் இயக்குநரை தவிர ஏனையோர் பெரும்பாலும் ஆங்கிலத்திலேயே உரையாடி இருந்தனர். நிகழ்வை நடத்திய அனோமா பொன்சேகா ஆங்கிலத்தில் மட்டுமே உரையாடி இருந்தார்.

இது தொடர்பில் பார்வையாளர் ஒருவர், "இங்கே தமிழர்களே அதிகளவில் உள்ளனர். கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளவர்களும் தமிழ் மொழி பேச தெரிந்தவர்களாக உள்ள போது ஏன் ஆங்கிலத்தில் உரையாடல் இருக்க வேண்டும்?" என கேள்வி எழுப்பினார்.

அதற்கு பதில் அளித்த இயக்குநர் அனோமா , "இது சர்வதேச திரைப்பட விழா அதனால் ஆங்கிலத்தில் உரையாடுவோம்" என தொனிப்பட பதில் அளித்தார்.

அதன் போது , சர்வதேச திரைப்பட விழாவாக இருந்தாலும் , யாழ்ப்பாணத்தை பிரதிபலிக்கும் படங்கள் மற்றும் "யாழ்" இசைக்கருவி என்பவற்றை இலச்சினையை விளம்பரப்படுத்தி "யாழ்ப்பாண சர்வதேச திரைப்பட விழா" என்று யாழ்ப்பாணத்தில் நடத்தும் போது, தமிழ் மொழியை புறக்கணிப்பது போன்று நடந்து கொள்வதுடன், ஏன் தமிழ் மொழியில் உரையாடல் நடத்தினீர்கள் என கேட்டதற்கு, "இதொரு சர்வதேச திரைப்பட விழா, இதனால் ஆங்கிலத்திலேயே கதைப்போம்" என பதில் அளித்தது கண்டனத்துக்கு உரியது என பார்வையாளர் ஒருவர் கண்டனத்தை பதிவு செய்தார்.

இதேவேளை மற்றுமொரு பார்வையாளர் , திரைப்பட விழாவின் ஆரம்ப நிகழ்வை அடுத்து திரையிடப்பட்ட சிங்கள மொழி திரைப்படத்தில், பேருந்தில் பயணிக்கும், தமிழ் குடும்பம் ஒன்றை சேர்ந்த சிறுவன் ஒருவர் இராணுவ சீருடையை ஒத்த சீருடை அணிந்து கையில் விளையாட்டு துப்பாக்கியுடன் பயணிப்பது போன்ற தொரு காட்சி இருந்தது. அதற்கும் கண்டனங்களை தெரிவித்து இருந்தார்.

அதேவேளை , கடந்த முறை யாழில் இருந்து முஸ்லிம் வெளியேற்றம் குறித்து படமாக்கப்பட்ட படம் குறித்து விமர்சனங்களை முன் வைத்த போது தன்னை "புலியின் வால்" கூறி தன்னை விமர்சித்து , தனது கருத்தை தெரிவிக்க விடாது தடுக்கப்பட்ட சம்பவத்தையும் அவ்விடத்தில் சுட்டிக்காட்டி இருந்தார். அத்துடன் தமிழ் சினிமா தொடர்பில் கதைக்கும் போது , நிதர்சனம் வெளியீடுகள் பற்றி எவரும் கருத்துக்களை முன் வைக்காது கவலை அளிப்பதாகவும் தெரிவித்தார். (ஐ)

# உள்ளூராட்சி தேர்தலில் ஈ. பி. டி. பி. மட்டக்களப்பில் தனித்துப் போட்டி!

கொழும்பு, ஜன. 07

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்திலும் வீணை சின்னத்தில் போட்டியிடுவதற்கு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ. பி. டி. பி) தீர்மானித்துள்ளது.

ஈ. பி. டி. பி. கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட முக்கியஸ்தர்களுக்கும், கட்சியின் செயலாளர் நாயகம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் இடையில் கொழும்பில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஈ. பி. டி. பி. கட்சியின் ஊடக செயலாளரும், கிழக்கு பிராந்திய அமைப்பாளருமான ஸ்ராலினின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில்,

பல்வேறு தரப்புக்களையும் இணைத்து கொண்டு எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலை எதிர்கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கட்சி வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# விழிசை மக்களின் ஒன்றுகூடல்!

யாழ்ப்பாணம், ஜன. 07

டாக்டர் நவரத்தினத்தின் விழிசை மக்களின் ஒன்றுகூடல் 2023 நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு தெல்லிப்பழை விழிசிட்டி சன சமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் சிறப்பு பேச்சாளராக கம்பவாரிதி இ. ஜெயராஜ் கலந்துகொள்ளவுள்ளார். இந்த நிகழ்வில் அனைவரையும் பங்கேற்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

Eelanadu
07.01.2023 சனிக்கிழமை
பிலவ வருடம், மார்கழி 23

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 730 1370**

# சிவில் சமூகத்தின் பணி?

பொதுவாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அல்லது ஏனைய தமிழ்த் தேசிய கட்சிகள் சில முயற்சிகளை மேற்கொள்கின்றபோது அல்லது, அரசாங்கத்துடன் பேச்சுகள் ஆரம்பிக்கப்படுகின்றபோது அல்லது அவ்வாறான நகர்வுகளுக்கான முயற்சிகள் வெளியில் தெரிகின்றபோது, சிவில் சமூகமென்னும் பெயரில் அறிக்கைகள் வெளிவருவதும் - சந்திப்புகள் இடம்பெறுவதும் - இறுதியில் அவ்வாறான சந்திப்புகளின் விளைவாக - இப்படித்தான் பேசவேண்டுமென்று ஆணையிடப்படுவதும் - தமிழ்த் தேசிய அரசியல் சூழலில் சாதாரணமாக இடம்பெறும் விடயங்களாகும்.

ரணில் விக்கிரமசிங்கவுடன் கூட்டமைப்பு சந்திப்புகளில் ஈடுபட்டதைத் தொடர்ந்து, வழமைபோல் சிவில் சமூகமென்னும் பெயரிலான அறிக்கைகளும் சந்திப்புகளும் இடம்பெறுவதை அவதானிக்க முடிகின்றது. பொதுசன வாக்கெடுப்பின் மூலம்தான் எந்தவோர் அரசியல் தீர்வும் தீர்மானிக்கப்பட வேண்டுமென்றவாறான அறிக்கையொன்று வெளியாகியிருக்கின்றது.

அதேபோன்று, வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவென்னும் பெயரில் இயங்கிவரும் அரசுசாரா நிறுவனங்களும் சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வுக்காக அனைத்து கட்சிகளும் ஒன்றிணைய வேண்டுமென்று வலியுறுத்தி அரசுசாரா நிறுவன ஒன்றுகூடல்களை முன்னெடுக்கின்றன. ரணில் விக்கிரமசிங்க - கூட்டமைப்பு சந்திப்பை தொடர்ந்தே இவ்வாறான செயல்பாடுகள் இடம்பெறுகின்றன. இதற்கும் அப்பால், சக்திவேல் என்னும் கிறிஸ்தவ மத குருவானவர் கூட்டமைப்புக்கு திராணியில்லை என்றவாறு அறிக்கையிட்டிருக்கின்றார்.

பொதுவாக கட்சிகள் மீதுதான் அனைவருமே குற்றம்சாட்டுவதுண்டு. ஆனால், இப்போது கட்சிகளையும் சாப்பிட்டுவிடுமளவுக்கு, சிவில் சமூகமென்னும் பெயரில் இயங்குபவர்கள் செயல்படுகின்றனர். விமர்சனங்களை முன்வைப்பது அவசியம். அந்த வகையில் சிவில் சமூகத்தின் தலையீடும் ஆலோசனைகளும் அவசியம். சிவில் சமூகத்தின் செயல்பாடுகள் ஜனநாயக அரசியலின் அத்திபாரமாகும். ஆனால், அவ்வாறான செயல்பாடுகள் பொறுப்புணர்வுமிக்கதாகவும் கட்சிகளை சரியான திசையில் வழிநடத்துவதாகவும் இருக்க வேண்டும். அவ்வாறில்லாது, பொறுப்பற்ற வகையிலான தலையீடுகளாக இருக்கக் கூடாது.

ஆறு கட்சிகள் இணைந்து இந்திய பிரதமருக்கு கடிதம் எழுதிய சந்தர்ப்பத்தின் போதும், இவ்வாறுதான் சிவில் சமூகமென்னும் பெயரில் அறிக்கைகள் வெளியிடப்பட்டிருந்தன. அது விமர்சிக்கப்பட்டது. ஆனால், அவ்வாறு விமர்சித்தவர்கள் அதன் பின்னர் எந்தவகையான செயல்பாடுகளிலும் ஈடுபடவில்லை. சிவில் சமூகமாக தங்களை அடையாளப்படுத்துபவர்கள் தொடர்சியான செயல்பாடுகளில் இருக்க வேண்டும். ‘அத்தி பூத்தாற் போன்று’ என்று கூறுவது போன்று சிவில் சமூக குழுக்கள் செயலாற்ற முடியாது. தொடர்ச்சியான செயல்பாடுகள் இருக்கின்ற போதுதான், அரசியல் கட்சிகளும் சிவில் சமூகத்தின் ஆலோசனைகளைக் கருத்தில் கொள்ளும்.

இதேவேளை, இவ்வாறு சிவில் சமூகமாக அறிக்கைகளை வெளியிடுபவர்களுக்கு மத்தியில் ஒருங்கிணைவோ - உடன்பாடுகளோ இல்லை. தமிழ் தேசிய கட்சிகளிடம் ஒற்றுமையை கோருபவர்கள் முதலில், சிவில் சமூகமாக விடயங்களில் ஒற்றுமைப்பட வேண்டும். நடைமுறைக்கு சாத்தியமான விடயங்களில் எவ்வாறு செயலாற்றுவ தென்னும் ஆலோசனைகளை கட்சிகளிடம் முன்வைக்க வேண்டும். அவ்வாறில்லாது, கூட்டமைப்பை பலவீனப்படுத்தி - இருக்கும் ஒரே யோர் அரசியல் அமைப்பையும் பலவீனப்படுத்தும் நோக்கில் செயலாற்றக்கூடாது. தமிழ்த் தேசிய கட்சிகள் மீதான விமர்சனங்கள், கண்டனங்கள் அவசியம். ஆனால், அது கட்சிகளையும் சிவில் சமூகத்தையும் எதிரியாக்கும் அணுகுமுறையில் அமையக் கூடாது.

# “இருக்கும் இடத்தை விட்டு இல்லாத இடம் தேடி எங்கெங்கோ அலைகிறான் ஞானத்தங்கமே”

**இராஜதந்திரி**

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தமது அமெரிக்க குடியுரிமையை மீளப்பெறும் நடவடிக்கையில் தற்போது தீவிர கவனம் செலுத்த ஆரம்பித்துள்ளதை அறிய முடிகின்றது. டுபாய் நாட்டுக்கு சென்று அங்கிருந்து மீளவும் அவர் நாடு திரும்பியுள்ளார்.

2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் விதத்தில் கோட்டாபய ராஜபக்ஷ தமது அமெரிக்க குடியுரிமையை இரத்துச் செய்திருந்தார். இதனையடுத்து அமெரிக்க இராஜாங்க திணைக்களம் அவரை அமெரிக்க பிரஜை என்ற அந்தஸ்தத்திலிருந்து நிராகரித்திருந்திருந்தது.

அத்துடன், கடந்த ஆண்டு கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிரான அறகலய ஆர்ப்பாட்டம் சூடு பிடித்ததையடுத்து அவர் ஜனாதிபதி பதவியிலிருநது விலக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருந்தது.

இதனையடுத்து அவர் நாட்டைவிட்டு தமது மனைவியோடு வெளியேற வேண்டியிருந்தது. முதலில் மாலைதீவுக்கும் பின்னர் சிங்கப்பூர், தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கும் அவர் சென்றிருந்தார். அவரை சிலநாட்கள் தற்காலிகமாக தமது நாடுகளில் தங்கியிருக்க அவர் சென்றிருந்த நாடுகள் அனுமதித்தன. ஆயினும், அவர் தமது அமெரிக்க குடியுரிமையை மீளப்பெறும் நடவடிக்கையிலேயே முனைப்பாக இருந்தார். ஆனால், இலங்கையைப் போன்ற நாடல்ல அமெரிக்கா.

ஒரு தடவை தமது நாட்டின் குடியுரிமையை ஒருவர் இரத்துச்செய்வாரானால் அதனை தமது நாட்டுக்குரிய ஒரு கௌரவப் பிரச்னையாகவே அமெரிக்கா கருதும். கோட்டாபய ராஜபக்ஷ ஒரு சாதாரண குடிமகனல்ல. இலங்கையின் ஜனாதிபதியாகவும் இருந்தவர். அத்துடன், அவர் முன்பு அமெரிக்க குடியுரிமை பெற்றமைகூட பாதுகாப்பு மற்றும் மனிதாபிமான காரணங்களின் அடிப்படையில் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தகைய பின்னணியில் இலங்கையில் தமது பதவியை துறக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டு மீளவும் அமெரிக்காவில் அடைக்கலம் தேடி தமது குடியுரிமையை அங்கே மீளப்பெறும் முயற்சியில் கோட்டாபய ராஜபக்ஷ ஈடுபட்டுள்ளார்.

இந்த முயற்சியைப் பொறுத்தவரை அமெரிக்கா மிக அவதானமாகவே நடந்துகொள்ளும். கோட்டாபய ராஜபக்ஷவின் சகோதரரான முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சீன சார்பான நிலைப்பாட்டை மிகத்தீவிரமாக கொண்டிருந்தவர். அவரைப் பின்பற்றி கோட்டாபய ராஜபக்ஷவும் சீன சார்பான போக்கை அதிகமாகவே கொண்டிருந்தார். இத்தகைய போக்கே அவரது சரிவுக்குக்கூட காரணமாக இருந்ததென்பதே இராஜதந்திர வட்டாரங்களில் பரவலான அபிப்பிராயமாக இருந்தது.

எனவே, இலங்கையில் மிரிஹானை பகுதியில் தமது சொந்த இல்லம் தீயிடப்பட்டதுடன் அம்பாந்தோட்டை மெதமுனலவில் அமைந்துள்ள ராஜபக்ஷ குடும்பத்தினரின் பூர்வீக இல்லமும் தீயிட்டு நாசமாக்கப்பட்டிருந்தது.



எனவே வீடிழந்து , நாடிழந்த நிலைக்குத் தள்ளப்பட்ட துர்ப்பாக்கிய நிலைக்கே கோட்டபாய ராஜபக்ஷ மட்டுமல்ல. அவரின் ஏனைய குடும்ப அங்கத்தவர்களும் தள்ளப்பட்டுள்ளனர்.


இலங்கையின் மூத்த இடது சாரி அரசியல் வாதியான பேராசிரியர் திஸ்ஸ வித்தாரண ராஜபக்ஷவினருக்கு ஏற்பட்டுள்ள துர்பாக்கிய நிலை குறித்து கடந்த ஆண்டு கருத்து வெளியிட்டபோது ராஜபக்ஷ குடும்பத்தினர் அரசியலில் இனிவருங்காலங்களில் தலையெடுப்பது கடினமானதாகவே இருக்குமென்று குறிப்பிட்டிருந்தார்.

73 வயதான கோட்டாபய ராஜபக்ஷ தமது அமெரிக்க சட்டத்தரணிகள் மூலமாக மீளவும் தமது அமெரிக்க குடியுரிமையை பெறும் விதத்தில் அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தை நாடியுள்ளார். மீளவும் அமெரிக்கக் குடியுரிமையை பெறும் விடயம் என்பது சட்ட ரீதியாக மிகவும் பணச் செலவுக்குரிய விடயமாகும். அத்துடன், காலதாமதம் கூட ஏற்படும்.

இந்தத் தருணத்தில் 2009ஆம் ஆண்டு கிளிநொச்சிப் பகுதியிலிருந்து மக்கள் இராணுவ நடவடிக்கைகள் சூடுபிடித்தபோது கையில் அகப்பட்டவற்றோடு தமது வீடு வாசல்களை இழந்து கால்நடையாக வந்து வன்னி - பெரு நிலப்பகுதியில் திக்குத்திசை தெரியாது பரிதவித்து நின்றமையே மனக்கண் முன் தோன்றுகின்றது. இந்த அவலத்தை அன்று பாதுகாப்புச் செயலாளராக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ ஹெலிகொப்டரில் பறந்து வட்டமடித்தவாறு பார்த்திருந்தார்.

இன்று தமது சொந்த நாட்டிலும் பதவி, பட்டாளங்களோடு இருக்க முடியாது பரிதவித்து நிற்கும் நிலையைப் பார்க்கும் போது திருவருட் செல்வர் திரைப்படத்தில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் பாடிய “இருக்கும் இடத்தை விட்டு இல்லாத இடம் தேடி எங்கெங்கோ அலைகின்றான் ஞானத்தங்கமே” என்ற பாடல் வரிகளே காதுகளில் ஒலிக்கின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஜனவரி - 07 சனிக்கிழமை
சுபகிருது வருடம் - மார்கழி 23
நல்ல நேரம் : 07.30 - 9.30
ராகு காலம் : 01.30 - 03.00
திதி : பிரதமை




**மேடம்**
உங்கள் முயற்சியில் வெற்றி உண்டாகும். நேற்றைய எதிர்பார்ப்பு நிறைவேறும். செயலில் வேகம் இருக்கும். குடும்பத்தில் ஒருவர் விருப்பத்தை பூர்த்தி செய்வீர்கள்.

**இடபம்**
உற்சாகத்துடன் நினைத்ததை சாதிப்பீர். உங்கள் எண்ணம் நிறைவேறும். வர வேண்டிய பணம் வரும். பழைய கடன்களை அடைப்பீர்கள். நிம்மதியான நாள். மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**மிதுனம்**
செயல்களில் குழப்பம் உண்டாகும். விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டிய நாள். யோசித்து செயல்பட வேண்டிய நாள். புதிய முயற்சிகளில் இன்று ஈடுபட வேண்டாம்.

**கடகம்**
எதிர்பாராத செலவுகளால் நெருக்கடிக்கு ஆளாவீர்கள். பொறுமை தேவையான நாள். அலைச்சல் அதிகரிக்கும். பொருளாதார நெருக்கடியால் சிறு சிறு சங்கடம் உண்டாகும். சிறு சலசலப்பு தோன்றி

**சிம்மம்**
நீண்டநாள் எண்ணம் ஒன்று நிறைவேறும். வரவேண்டிய பணம் வந்து சேரும் நாள். திட்டமிட்டு நினைத்ததை செய்வீர்கள். தொழிலில் இருந்து வந்த தடை விலகும். பழைய கடன் வசூலாகும்.

**கன்னி**
குடும்பத்தில் ஒருவரின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். கோயிலுக்கு செல்வீர்கள். எதிர்பார்த்த பணம் வரும். நிதி நிலை சீராகும்.மனநிறைவான நாள். நீங்கள் எதிர்பார்த்த தகவல் இன்று வரும்.

**துலாம்**
குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்னை விலகும். நீங்கள் மேற்கொள்ளும் முயற்சி பலிதமாகும். தடைபட்டிருந்த செயல்களை மீண்டும் தொடர்வீர்கள். உங்கள் எண்ணம் நிறைவேறும்.

**விருட்சிகம்**
சந்திராஷ்டமம் தொடர்வதால் செயல்களில் கவனம் தேவை. புதிய முயற்சி வேண்டாம். இனம் புரியாத சங்கடத்திற்கு ஆளாவீர்கள். மனம் சீராக கோயிலுக்கு செல்வீர்கள்.

**தனுசு**
உங்கள் எதிர்பார்ப்பு நிறைவேறும். குடும்பத்தில் இருந்து வந்த பிரச்னை நீங்கும். புதிய முயற்சி பலன் தரும். குடும்ப தேவைகள் பூர்த்தியாகும் நாள். எதிர்பார்த்த அனுகூலம் ஏற்படும். தடைபட்டிருந்த வேலைகளை மீண்டும் தொடரும்.

**மகரம்**
பொருளாதார நெருக்கடி விலகும். எதிர்பார்த்த பணம் வீடு தேடி வரும். விஜபி ஆதரவுடன் ஒரு முயற்சியை நிறைவேற்றி லாபமடைவீர்கள். பொது நலனில் உள்ளோருக்கு செல்வாக்கு உயரும்.

**கும்பம்**
குடும்பத்தில் ஒருவருடைய தேவைகளை பூர்த்தி செய்வீர்கள். வருமானம் உண்டாகும். உங்களைச் சுற்றி இருப்பவர்களைப் பற்றி தெரிந்து கொள்வீர்கள். சாதுர்யமாக செயல்படுவீர்கள்.

**மீனம்**
அலைச்சல் அதிகரிக்கும் நாள். உடல்நிலையில் கவனம் தேவை. ஆரோக்யத்தில் சங்கடம் உண்டாகும். மருத்துவரை சந்தித்து ஆலோசனை பெறுவீர். உறவினர் ஒருவரால் சங்கடம் ஏற்படும்.

# தமிழ்நாடு குறித்து ஆளுநரின் சர்ச்சை பேச்சுக்கு கண்டனம்!

சென்னை, ஜன. 07

தமிழ்நாடு குறித்து ஆளுநர் ஆர். என். ரவி தெரிவித்த கருத்து சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள நிலையில், ருவிற்றரில் சூதமிழ்நாடு என்ற ஹாஷ்ராக் இந்திய அளவில் பிரபலமாகியுள்ளது.

தமிழ்நாடு ஆளுநர் ஆர். என். ரவி, நேற்று முன்தினம் நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையில், தமிழ்நாடு என்று கூறுவதை விட தமிழகம் என்று கூறுவதே சரியானது என்று தெரிவித்தார். இவரின் இந்த பேச்சு பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

மேலும், இதற்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் தமிழ்நாடு என்ற ஹாஷ்ராக் ருவிற்றர் தளத்தில் இந்திய அளவில் முதலிடம் பெற்றது.

ஆளுநரின் சர்ச்சை பேச்சுக்கு, தி. மு. க. உள்ளிட்ட அரசியல் கட்சியினர் கண்டனம் தெரிவித்து வருகின்றனர். தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தனது ருவிற்றர் பக்கத்தில், "தமிழ்நாடு வெறும் பெயரல்ல. புவியியல் -மொழியியல் - அரசியல் - பண்பாட்டின் தனித்துவ அடையாளம். பெரும் போராட்டத்துக்கு பிறகு தமிழ் நிலத்துக்கு பெயர் சூட்டினார். கழகம் தந்த அண்ணா. அவர் வழியிலும், முத்தமிழறிஞர் வழியிலும் தமிழ்நாட்டை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான கழகம் அரணாக காத்து நிற்கும்!" என்று பதிவிட்டுள்ளார்.

பாராளுமன்ற தி. மு. க. குழுத் தலைவருமான டி. ஆர். பாலு வெளியிட்ட அறிக்கையில், தமிழ்நாடு - தமிழன் - தமிழ் என்பவை கசப்பானவையாக இருந்தால் அவற்றை விட்டு ஆளுநர் விலகவேண்டும் என தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினரும், தி. மு. க. துணைப் பொதுச்செயலாளருமான கனிமொழி கருணாநிதி, "நம் மொழி - பண்பாடு - அரசியல் - வாழ்வியலின் அடையாளம் "தமிழ்நாடு". அப்பெயரை சட்டமன்றத்தில் சட்டமியற்றி, பயன்பாட்டிற்குக் கொண்டு வந்தது பேரறிஞர் அண்ணா தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழக அரசு. இது என்றும் தமிழ்நாடு தான்! "தமிழ்நாடு" என்று தனது ருவிற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

இவ்வாறு தொடர்ந்து பல்வேறு அரசியல் தலைவர்கள் தங்களது கண்டனக் குரலை எழுப்பி வரும் நிலையில், ஆளுநருக்கு எதிராக இணையவாசிகள் சூதமிழ்நாடு என்ற ஹாஸ்ராக்கை அதிகம் பயன்படுத்தி வருகின்றனர்.

# தமிழ்நாடு பெயரை மாற்றி அழைக்க ஆளுநருக்கு அருகதை இல்லை!

## வைகோ கடும் கண்டனம்

சென்னை, ஜன. 07

"தமிழ்நாடு என்ற பெயரை மாற்றி அழைக்க வேண்டும் என்று சொல்வதற்கு ஆளுநர் ரவிக்கு எந்த அருகதையும் இல்லை" என்று மதிமுக பொதுச் செயலாளர் வைகோ காட்டமாக தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"ஆளுநர் மாளிகையில் காசி தமிழ்ச் சங்கமம் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்தவர்களைச் சிறப்பிக்கும் வகையில் நடந்த நிகழ்ச்சியில் பங்கேற்று உரையாற்றிய தமிழ்நாடு ஆளுநர் ஆர். என். ரவி தெரிவித்திருக்கும் கருத்துகள் விஷமத்தனமானவை. "தமிழகத்தில் ஒரு வித்தியாசமான அரசியல் சூழல் உள்ளது. எல்லாவற்றுக்கும் நாங்கள் திராவிடர்கள் என்று சொல்கிறார்கள். இந்தியா முழுவதும் ஒரு செயல் திட்டம் இருந்தால், அதனை வேண்டாம் என்கிறது தமிழ்நாடு. முதலில் தமிழ்நாடு என்று சொல்வதைவிட, தமிழகம் என்று சொல்வதுதான் சரியாக இருக்கும்" என்று ஆளுநர் ஆர்.என்.ரவி பேசியிருப்பது கடும் கண்டனத்துக்கு உரியது.

தமிழ்நாடு என்ற பெயரை மாற்றி அழைக்க வேண்டும் என்று சொல்வதற்கு ஆர். என். ரவிக்கு எந்த அருகதையும் இல்லை. அதிகார ஆணவம் தலைக்கேறிய நிலையில், என்ன பேசுகிறோம் என்பதே தெரியாமல் பேசிக்கொண்டிருக்கிறார் என்று தமிழ்நாடு மக்கள் நினைக்கவில்லை. மாறாக, எல்லாவற்றையும் திட்டமிட்டு, ஆர்.எஸ்.எஸ். இந்துத்துவா சனாதனக் கும்பல் போட்டுத் தந்த தடத்தில் நின்றுதான் ஆர். என். ரவி பேசிக்கொண்டு இருக்கிறார்.

தமிழ்நாடு என்று பெயர் சூட்டுவதற்கு நடைபெற்ற போராட்ட வரலாறு ஆர்.எஸ்.எஸ் பிரச்சாரகர் ஆர்.என்.ரவிக்கு தெரிவதற்கு வாய்ப்பு இல்லை. தமிழ்நாடு என பெயர் சூட்டக் கோரி விடுதலைப் போராட்டத் தியாகி சங்கரலிங்கனார் 76 நாட்கள் உண்ணா நோன்பு இருந்து உயிர்த் தியாகம் செய்த வரலாறு இவர் அறிந்திருப்பாரா?

1967 இல் பேரறிஞர் அண்ணா முதல்வர் ஆனவுடன், 1967 ஜூலை 18 ஆம் தேதி, சென்னை மாநிலத்திற்கு 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டக் கோரி சட்டமன்றத்தில் தீர்மானம் முன்மொழிந்து நிறைவேற்றினார். இச்சட்ட முன்வடிவு குடியரசுத் தலைவர் இசைவினைப் பெற்று, 1969 ஜனவரி 14 பொங்கல் திருநாளில் 'தமிழ்நாடு' எனும் பெயர் சூட்டப்பெற்று, நடைமுறைக்கு வந்தது.

ஆளுநர் ஆர்.என்.ரவி எல்லை மீறி பேசுவது அவர் வகிக்கும் பொறுப்புக்கு அழகல்ல. திராவிட இயக்கம் பற்றிய அவரது விமர்சனங்கள், அவர் பா.ஜ.கவின் நிழல் தலைவர் என்பதை படம்பிடித்துக் காட்டுகிறது. ஆர்.என்.ரவி 'தமிழ்நாடு' பெயரை மாற்றி அழைக்க வேண்டும் என்று கூறிய கருத்தை உடனடியாக திரும்பப் பெற வேண்டும் - என்றார். (ஐ)

# சென்னையில் ஜல்லிக்கட்டு நடத்த கமல் ஹாசன் முயற்சி

சென்னை, ஜன. 07

"சென்னையில் ஜல்லிக்கட்டுப் போட்டிகளை நடத்த வேண்டும் என்பது எங்களுடைய ஆசை. அதற்கான அனுமதிகளைப் பெறுவதற்காக முயற்சித்துக் கொண்டிருக்கிறோம். அதற்கான அனுமதி கிடைக்கும் என்று நம்புகிறோம்" என்று மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல்ஹாசன் கூறியுள்ளார்.

மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல்ஹாசன் மற்றும் அந்தக் கட்சியினர், காங்கிரஸ் கட்சியின் முக்கியத் தலைவர் ராகுல் காந்தி மேற்கொண்டு வரும் இந்திய ஒற்றுமை யாத்திரையில் டெல்லியில் கலந்துகொண்டனர். இந்த யாத்திரையில் பங்கேற்ற மநீம நிர்வாகிகளுக்கு நன்றி தெரிவிக்கும் கூட்டம் கட்சியின் தலைவர் கமல்ஹாசன் தலைமையில் சென்னையில் நேற்று நடந்தது.

இதில் கருத்துரைத்த கமல் ஹாசன், சென்னையில் ஜல்லிக்கட்டுப் போட்டிகளைக் கொண்டுவந்து நடத்த வேண்டும் என்பது எங்களுடைய ஆசை. அதற்கான அனுமதிகளைப் பெறுவதற்காக முயற்சித்துக் கொண்டிருக்கிறோம். அதற்கான அனுமதி கிடைக்கும் என்று நம்புகிறோம். மேலும் கட்சியின் செயல்பாடுகள் குறித்து விவாதித்தோம்" என்றார்.

அப்போது மெரினாவில் ஜல்லிக்கட்டுப் போட்டி நடத்தப்படுமா என்று கேள்வி கேட்கப்பட்டது. அதற்கு பதிலளித்த அவர், "சென்னையில் ஜல்லிக்கட்டுக்காக நடந்த போராட்டம் உங்களுக்கு மறந்து போயிருக்கலாம். எனக்கு மறக்கவில்லை. எனவே, போராட்டம் நடைபெற்ற இடத்தில் அதை நடத்தமுடியாது. ஏனென்றால், அதில் பல சட்ட சிக்கல்கள் இருக்கின்றன. ஆனால், சென்னையில் நடத்த வேண்டும். நகரத்தில் வசிப்பவர்களுக்கு அதன் அருமையும், பெருமையையும் புரிய வைக்க வேண்டும் என்பதுதான் எங்களின் ஆசை" என்றார். (ஐ)

# புதிய வரித் திட்டத்தை அரசு அமுலாக்கினால் போராட்டம்

## தொழிற்சங்கங்கள் எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 07

உத்தேசித்துள்ள வரித் திருத்தங்களை முன்னெடுக்க அரசாங்கம் தீர்மானித்தால் தொடர்ச்சியான தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடப் போவதாக வைத்தியர்கள், வங்கியாளர்கள் மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் குழு எச்சரிக்கை விடுத்துள்ளது.

புதிய வரித் திட்டத்தை அரசாங்கம் அமுல்படுத்தினால் நாளை ஞாயிற்றுக்கிழமை முதல் தொடர் போராட்டங்களில் ஈடுபடப் போவதாக தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

நாட்டின் நலனுக்காக உழைக்கும் தொழில் வல்லுநர்களுக்கு உத்தேச வரிகள் நியாயமற்றவை என அவர்கள் குறிப்பிட்டனர்.

இதேவேளை, அரச ஊழியர்களால் பெறப்படும் கடனுக்கான வட்டி வீதத்தை அதிகரிக்க இலங்கை மத்திய வங்கி எடுத்த தீர்மானத்திற்கு எதிராக, இலங்கை நிதாஹஸ் சேவக சங்கமயாவுடன் இணைந்த சுகாதாரத் துறை ஊழியர்கள் ஜனவரி 9ஆம் திகதி சுகயீன விடுமுறையில் செல்ல தீர்மானித்துள்ளனர். (அ)

# வடக்கு-கிழக்கில் காணி விடுவிப்பு; தைப்பொங்கல் விசேட அறிவிப்பு?

கொழும்பு, ஜன. 07

வடக்கு - கிழக்கு காணி விடுவிப்பு தொடர்பில் எதிர்வரும் 15ஆம் திகதி தைப்பொங்கல் தினத்தில் அறிக்கையொன்றை வெளியிடவுள்ளதாக ஜனாதிபதி அறிவித்துள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் கூட்டமைப்பின் பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

தமிழ் மக்களின் காணி தொடர்பான பிரச்னைகள் மற்றும் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் அங்கு கலந்துரையாடப்பட்டது. (அ)

# இலங்கைக்கு ஆதரவளிப்பதாக அவுஸ்திரேலியா மீண்டும் உறுதி!

கொழும்பு, ஜன. 07

சர்வதேச நாணய நிதியத்துடனான கலந்துரையாடல்களிலும் பாரிஸ் கிளப் கூட்டங்களிலும் இலங்கைக்கு ஆதரவளிப்பதாக அவுஸ்திரேலியா உறுதியளித்துள்ளது.

அவுஸ்திரேலிய தூதுவர் போல் ஸ்டீபன்ஸ் மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோருக்கு இடையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற சந்திப்பின்போதே இந்த விடயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டது.



உள்நாட்டு மாணவர்களை மட்டுமின்றி, ஆசியா, மத்திய கிழக்கு மற்றும் ஆபிரிக்க நாடுகளிலிருந்தும் மாணவர்களை ஈர்க்கும் வகையில் அவுஸ்திரேலிய பல்கலைக்கழகங்கள் இலங்கையில் இணைந்த வளாகங்களை நிறுவ முடியும் எனவும் பிரதமர் இதன்போது தெரிவித்தார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியை வெற்றி கொள்ள, குறிப்பாக சுமார் 75 மில்லியன் அவுஸ்திரேலிய டொலர் பெறுமதியான மருந்து மற்றும் அத்தியாவசிய பொருட்களை இலங்கைக்கு வழங்கியமைக்காக பிரதமர் அவுஸ்ரேலியாவுக்கு நன்றி தெரிவித்தார்.

அத்துடன், சர்வதேச நாணய நிதியத்துடனான கலந்துரையாடல்களிலும் பாரிஸ் கிளப் கூட்டங்களிலும் இலங்கைக்கு ஆதரவளிப்பதாக தூதுவர் ஸ்டீபன்ஸ் உறுதி யளித்துள்ளார். (அ)

# கிளிநொச்சியில் நேற்று 2ஆம் நாள் போராட்டம்




கிளிநொச்சி, ஜன. 07

வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் தொடர் கவனயீர்ப்பு போராட்டம் கிளிநொச்சியில் 2ஆவது நாளாக முன்னெடுக்கப்பட்டது.

இந்த போராட்டம் நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் பளை நகரப் பகுதியில் இடம்பெற்றது.

இதன்போது, பல்வேறு விடயங்களை உள்ளடக்கிய பதாதைகளை மக்கள் ஏந்தியிருந்தனர்.

ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்துக்கு மீளப்பெற முடியாத சமஷ்டியை வலியுறுத்துவதற்கு அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளையும் ஓரணியில் இணைய வலியுறுத்தியே குறித்த போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது. (அ)

# தமிழரசுக்கட்சியின் மத்திய குழு கூட்டம் இன்று மட்டக்களப்பில்

கொழும்பு, ஜன. 07

தமிழரசுக்கட்சியின் மத்திய குழுக் கூட்டம் இன்று சனிக்கிழமை மட்டக்களப்பில் நடைபெறவுள்ளது.

இந்த கூட்டத்தில் கட்டாயம் பங்கேற்குமாறு மத்திய குழு உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தமிழ்த் தேசியக் கட்சிகள் ஓரணியாக உள்ளூராட்சி சபைத் தேர்தலை எதிர்கொள்வது தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குள் இரு வேறு நிலைப்பாடுகள் காணப்படுகின்றன.

எனவே அது தொடர்பில் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் இறுதி முடிவெடுப்பது என அரசியல் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# சட்டவிரோதமாக கடலட்டை பிடித்த 9 பேர் மன்னார் கடற்படையால் கைது!

மன்னார், ஜன. 07

மன்னாரில் சட்டவிரோதமான முறையில் கடலட்டைகளை பிடித்த 09 பேரை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

மன்னார் அச்சங்குளத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை அதிகாலை மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர் என கடற்படை தெரிவித்துள்ளது.

பல்வேறு வகையான சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளை தடுப்பதற்காக மன்னார் தீவைச் சூழவுள்ள கரையோர மற்றும் கடற்பரப்புகளில் தொடர்ச்சியான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக கடற்படை தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் மன்னார் வங்காலைப் பகுதியைச் சேர்ந்த 25 வயதுக்கும் 58 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். (அ)

# இலங்கை அகதிகள் 38 பேர் கர்நாடகாவில் உணவு தவிர்ப்பு

புதுடில்லி, ஜன. 07

கனடா செல்வதற்காக முகவர்களால் இந்தியாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டு அவர்களாலேயே காட்டிக்கொடுக்கப்பட்டு கைது செய்யப்பட்ட இலங்கை அகதிகள் 38 பேர் நேற்று தொடக்கம் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் கர்நாடகாவின் மங்களூரில் கைது செய்யப்பட்ட சிறையில் அடைக்கப்பட்டுள்ள அவர்களை விடுதலை செய்த நீதிமன்றம் நாட்டுக்கு அனுப்புவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு உத்தரவிட்டிருந்தது.

அதற்கான ஏற்பாட்டினைச் செய்வதற்காக 15 நாள்கள் அவகாசம் நீதிமன்றினால் வழங்கப்பட்ட போதிலும் தம்மை அனுப்பி வைப்பதற்கான ஏற்பாட்டை சம்மந்தப்பட்ட அதிகாரிகள் மேற்கொள்ளவில்லை என்று தெரிவித்தே அகதிகள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.



யாரிடம் தொடர்புகொள்வது என்பது தெரியாது என்று பரிதவிப்பதாக அவர்கள் தெரிவித்தனர்.

ஒரு விடுதியில் தாம் தங்கவைக்கப்பட்டுள்ளதாகவும் உணவு, மருத்துவ வசதிகள் இல்லை எனவும் சிலர் கடும் நோய்த்தாக்கத்துக்கு உட்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர் சம்பந்தப்பட்டவர்கள் தம்மை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு அவர்கள் வேண்டு கோள் விடுத்துள்ளனர். (அ)

# கரைச்சிப் பிரதேச சபை நிர்மாணித்த வாகன சுத்திகரிப்பு நிலையம் திறப்பு

கிளிநொச்சி, ஜன. 07

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையினால் 25 மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபைக்கான வாகன சுத்திகரிப்பு நிலையம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வு சபையின் தவிசாளர் வேழமாலிகிதன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சத்தியராகவன், சபையின் உறுப்பினர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் இணைந்து குறித்த சுத்திகரிப்பு நிலையத்தை திறந்து வைத்தனர்.

சுமார் 36 வாகனங்களைப் பராமரித்தல், தூய்மைப்படுத்தல் என்பவற்றிற்காக ஏற்பட்ட அதிகமான செலவினங்களை குறைக்கும் வகையில் இந்த நவீன சுத்திகரிப்பு நிலையம் உருவாக்கப்பட்டது.



இதனால் சபை செலவீனங்களை கட்டுப்படுத்த முடியும் எனவும், ஏனைய அரச நிறுவனங்கள் கோரிக்கை விடுத்தால், அவர்களுக்கும் சேவை வழங்க முடியும் எனவும் தவிசாளர் குறிப்பிட்டார்.

# அரச சொத்துக்களை தேர்தல் பிரசாரத்துக்கு பயன்படுத்தினால் மூன்று ஆண்டுகள் சிறை

## தேர்தல் ஆணைக்குழு அறிவிப்பு

கொழும்பு, ஜன. 07

அரச சொத்துக்களை தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு பயன்படுத்த வேண்டாம் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

கடந்த 4 ஆம் திகதி 340 உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் தொடர்பிலாள அறிவித்தல் வெளியிடப்பட்டது.

அன்றிலிருந்து தேர்தல் நடத்தப்பட்டு இறுதி முடிவுகள் அறிவிக்கப்படுவதற்கிடையிலான காலப்பகுதி தேர்தலுக்கான காலம் என அடையாளப்படுத்தப்படுகிறது என தேர்தல் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இந்த காலப்பகுதிக்குள் அரசியல் கட்சிகள், குழுக்கள் என்பன வேட்பாளர்கள் தொடர்பில் பிரசாரங்கள் மேற்கொள்ளல் உள்ளிட்ட செயற்பாடுகளுக்கு அரச சொத்துக்களை உபயோகிப்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டும் எனவும் வலியறுத்தப்பட்டுள்ளது.

தேர்தல் இடம்பெறவுள்ள மாவட்டங்களில் அரச உத்தியோகத்தர்கள், ஊழியர்களுக்கு பதவி உயர்வு, இடமாற்றம் உள்ளிட்ட செயற்பாடுகளும் மட்டுப்படுத்தப்படவேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அவதானம் செலுத்துமாறு அரச சொத்துக்களுக்கு பொறுப்பான அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்கள பிரதானிகள் உள்ளிட்ட அனைவரிடமும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்தில் 104 (ஆ) (4) (அ) உறுப்புரைகளுக்கமைய அரச சொத்துக்களை தேர்தல் பிரசார பணிகளுக்காக உபயோகிப்பதற்கு தடை விதிக்கும் அதிகாரம் ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்பட்டுள்ளது.

குறித்த உறுப்புரையின் (ஆ) பிரிவுக்கமைய ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் கட்டளைகளுக்கு அனைத்து தரப்பினரும் இணங்க வேண்டும் எனவும் தேர்தல் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

மாறாக அவற்றை மீறி செயற்படுபவர்களுக்கு எதிராக குற்றஞ்சாட்டப்பட்டு, அக்குற்றம் நிரூபிக்கப்பட்டால் 3 ஆண்டு சிறை தண்டனை அல்லது ஒரு இலட்சம் தண்டப் பணம் அல்லது இரு தண்டனைகளும் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# மீளப் பெற முடியாத சமஷ்டியை வலியுறுத்தி நாவற்குழியிலும் கவனவீர்ப்புப் போராட்டம்



யாழ்ப்பாணம், ஜன. 07

தமிழ் அரசியல் கட்சிகளை ஒன்றிணைய கோரி, வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் கவனயீர்ப்புப் போராட்டம் இரண்டாவது நாளாகவும் நாவற்குழியில் நேற்று வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு - மாகாணத்தின் 8 மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த கவனயீர்ப்பு போராட்டம் நாவற்குழி சந்திக்கு அருகாமையில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

“ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு மீளப் பெற முடியாத சமஷ்டியை வலியுறுத்தி அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளும் ஓரணியில் திரள வேண்டும்” என்ற கோரிக்கையை முன்வைத்து இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வரை முன்னெடுக்கப்படவுள்ளது. (அ)

# பணத்தை அச்சடித்து தேர்தல் நடத்தும் முதல் நாடு இலங்கை

## ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய கூறுகிறார்

கொழும்பு, ஜன. 07

பாரிய பொருளாதார நெருக்கடியின்போது பணத்தை அச்சடித்து உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை நடத்தும் முதல் நாடாக இலங்கை மாறும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

தெரணியகல பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

கடந்த வருடம் 2 ஆயிரத்து 500 பில்லியன் ரூபாய் நாணயத் தாள்கள் அச்சிடப்பட்ட போதிலும், அவை அன்றாட செலவுகளுக்கு பயன்படுத்தப்படவில்லை - என்றார். (அ)

# வவுனியாவில் ஐக்கிய மக்கள் சக்தியின் உள்ளூராட்சி வேட்பாளர்கள் அறிமுகம்



வவுனியா, ஜன. 07

வவுனியா மூன்றுமுறிப்பில் அமைந்துள்ள ஐக்கிய மக்கள் சக்தி மாவட்ட அலுவலகத்தில் மாவட்ட அமைப்பாளர் ச. நிரேஷ்குமார் தலைமையில் உள்ளூராட்சி மன்ற வேட்பாளர் அறிமுக நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிழ்வில் மாத்தறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் புத்திக்க பத்திரன, தேசிய அமைப்பாளர் உமா சந்திரப் பிரகாஸ், வவுனியா அமைப்பாளர் பிரியதர்சினி ரசிக்கா, முன்னாள் மாவட்ட அமைப்பாளர் கருணதாசா, அமைப்பின் உறுப்பினர்கள் ஆதரவாளர்கள் பொதுமக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (அ)

# வடக்கு - கிழக்கு மாகாணங்கள் தனி அலகாக உருவாகவேண்டும்

## வவுனியாவில் நேற்று போராட்டம்



வவுனியா, ஜன. 07

வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் தொடர் கவனயீர்ப்பு போராட்டம் வவுனியா தரணிக்குளத்தில் நேற்று 2ஆம் நாளாக முன்னெடுக்கப்பட்டது.

நேற்று வெள்ளிக்கிழமை வவுனியா பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட தரணிக்குளம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்துக்கு முன்பாக நடந்த இந்த போராட்டம் வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் இடம்பெற்றிருந்தது.

ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கு மீளப்பெற முடியாத சமஷ்டியை வலியுறுத்துவதற்கு அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளையும் ஓரணி யில் இணைய வலியுறுத்தியே குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன் போது தமிழ் அரசியல் கட்சிகளிடையே அரசியல் தீர்விற்கான நடவடிக்கைகள் ஒருமித்த முறையில் முன்னெடுக்கப்படவேண்டும், அனைத்து தமிழ் கட்சிகளும் ஓரணியில் திரள்க, வடக்கு-கிழக்கு மாகாணங்கள் மீள ஒருங்கிணைக்கப்பட்டு தனி மாகாண அலகாக உருவாக்கபடவேண்டும் போன்ற பல்வேறு விடயங்களை உள்ளடக்கிய பதாதைகளை மக்கள் ஏந்தியிருந்தனர். (அ)

# எரிவாயுவின் விலையை குறைக்கின்றது லாப்ஸ்!

கொழும்பு, ஜன. 07

லாப்ஸ் காஸ் நிறுவனம் எரிவாயு விலையை குறைக்க தீர்மானித்துள்ளது.

இதற்கமைய, கொழும்பு மாவட்டத்தில் 12.5 கிலோ கிராம் எரிவாயு சிலிண்டரின் புதிய விலை 5080 ரூபா என அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

அத்துடன், கொழும்பு மாவட்டத்தில் 5 கிலோ கிராம் லாப்ஸ் எரிவாயு சிலிண்டரின் புதிய விலை 2032 ரூபாய் எனவும் குறிப்பிடப்படுகின்றது.

ஏனைய மாவட்டங்களுக்கு ஏற்ப மாறுபடும் விலைகளை அறிய வாடிக்கையாளர் சேவை எண்ணான 1345 ஐ அழைக்குமாறு அந்த நிறுவனம் அறிவித்துள்ளது. (அ)

# இலங்கையின் உத்தியோகபூர்வ கையிருப்பு சொத்துகள் அதிகரிப்பு!

கொழும்பு, ஜன. 07

இலங்கையின் உத்தியோகபூர்வ கையிருப்பு சொத்துக்கள் அதிகரிப்பை கண்டுள்ளதாக மத்திய வங்கியின் அறிக்கை தெரிவிக்கின்றது.

அறிக்கையின் படி, கடந்த செப்ரெம்பர் மாதத்துடன் ஒப்பிடும்போது இலங்கையின் உத்தியோகபூர்வ கையிருப்பு சொத்துக்கள் டிசெம்பர் இல் 5 சதவீதம் அதிகரித்து 1,896 மில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவாகியுள்ளது.

கடந்த நவம்பர் மாதம் இலங்கையின் உத்தியோகபூர்வ கையிருப்பு சொத்துக்கள் 1,806 மில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

ஈழநாடு



# வரி அதிகரிப்பால் வட பகுதியில் வைத்திய சிகிச்சைக்கு இடையூறு

## யாழ். தீவகப் பகுதி வைத்தியர் சங்கம் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜன. 07

அரசாங்கத்தின் புதிய வரிக் கொள்கையினால் யாழ்ப்பாண மாவட்டத்தின் தீவுகளில் வாழும் மக்கள் அடிப்படை வைத்திய வசதிகளையும் இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக வைத்திய சங்கம் ஒன்று எச்சரிக்கை விடுத்துள்ளது.

2023ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் புதியவருமான வரியானது, வைத்தியர்களுக்கும் பல்வேறு தொழில்துறைகளுக்கும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக யாழ். தீவகப் பகுதி வைத்தியர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

யாழ்ப்பாணத் தீவுகளில் அமைந்துள்ள வைத்திய சாலைகளுக்கு பணிக்குச் செல்லும் வைத்தியர்கள் போக்குவரத்துக்கு பெருமளவு பணத்தை செலவிடவேண்டியுள்ளதால், அந்த வைத்திய சாலைகளில் பணியாற்றுவதற்கு வைத்தியர்கள் மிகவும் தயக்கம் காட்டுவதாக யாழ். தீவகப் பகுதி வைத்தியர் சங்கத்தின் செயலாளர் எஸ். நிஷாந்தன் கூறியுள்ளார்.



டிசம்பர் 9, 2022 அன்று பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட உள்நாட்டு வருமான வரி (திருத்த) சட்டத்திற்கு அமைய, மாதத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேல் வருமானம் ஈட்டும் தனிநபர்களின் வருமானத்திற்கு வரி விதிக்கப்படு வதோடு, ஒரு இலட்ச ரூபாய் வரை மாத வருமானம் பெறுபவர்களுக்கு வரி விதிப்பில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக ஏற்கனவே பல வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறி வருவதாக சுட்டிக் காட்டிய வைத்தியர் எஸ்.நிஷாந்தன், யாழ்ப்பா ணத் தீவுகளில் அமைந்துள்ள வைத்தியசாலைகளில் வைத்தியர்களுக்கு கடுமையான பற்றாக் குறைக்கு நிலவுவதாகவும், அந்தத் தீவுகளுக்குச் செல்வதற்கு வைத்தியர்கள் அதிக போக்குவரத்துச் செலவுகளைச் சுமக்க வேண்டியிருப்பதே இதற்கு காரணம் எனவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

புங்குடுதீவு, வேலணை, ஊர்காவற்றுறை, காரைநகர், எழுவைதீவு, நயினாதீவு, நெடுந்தீவு போன்ற தீவுகளில் உள்ள அனைத்து வைத்திய சாலைகளும் வைத்தியர் பற்றாக்குறையை எதிர் நோக்கு வதாகவும் இதனால் அந்த வைத்திய சாலைகளில் சிகிச்சை பெறும் நோயாளர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர் கொள்வதாகவும் வைத்தியர் சுட்டிக்காட்டினார்.

காரைநகர் வைத்தியசாலையில் இருந்து வைத்தியர் ஒருவர் விலகியுள்ளதாகவும், அனலை தீவு வைத்தியசாலைக்கு நியமிக்கப்பட்ட வைத்தியர் ஒருவர் அங்கு பணிக்கு சமூகமளிக்கா மலேயே விலகியுள்ளதாகவும் வைத்தியர் நிஷாந்தன் வெளிப்படுத்தியுள்ளார்.

வேலணை வைத்தியசாலையில் ஒரு வைத்தியர் மாத்திரமே கடமையாற்றுவதுடன் அவரும் வெளியேறத் தயாராகி வருவதால் வைத்தியசாலை மூடப்படும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ள தோடு, நெடுந்தீவு வைத்தியசாலையிலும் ஒரு வைத்தியரே கடமையாற்றுவதாகவும் குறிப்பிட்டார்.

இந்த தீவுகளில் பயணச் செலவுகளுக்கு மேலதிகமாக, உணவுப் பொருட்களின் விலையும் மிக அதிகமாக உள்ளதாக தெரிவித்த வைத்திய சங்கத்தின் செயலாளர், தீவுகளில் உள்ள வைத்தியர்களுக்கு உணவு உள்ளிட்ட அடிப்படை வசதிகள் கிடைப்பதில்லை எனவும் கூறினார்.

இவ்விடயம் தொடர்பில் விரைவான தீர்வை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர்களை வைத்தியர் நிஷாந்தன் கோரியுள்ளார்.

(அ)

# போதைப்பொருள் வர்த்தகம்: சிறுவனை கடத்தினார் பெண்!

கொழும்பு, ஜன. 07

போதைப்பொருளுக்காக பணம் செலுத்தாமை காரணமாக 10 வயது சிறுவனை கடத்திச் சென்ற சம்பவம் நீர்கொழும்பில் இடம்பெற்றுள்ளது.

நீர்கொழும்பில் உள்ள வர்த்தகர் ஒருவரின் புதல்வர் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்துள்ளார்.

தமது வர்த்தகத்திற்காக அவர் கிராண்ட்பாஸ் பகுதியிலுள்ள பெண் ஒருவரிடம் இருந்து போதைப்பொருட்களை கொள்வனவு செய்துள்ளார். அதற்காக செலுத்த வேண்டிய பணம் தாமதமானதன் காரணமாக குறித்த பெண், வர்த்தகரின் 10 வயதான பேரனை கடத்திச் சென்று, கிராண்ட்பாஸ் ரந்திய உயன பகுதியிலுள்ள வீடமைப்பு தொகுதியில் தடுத்து வைத்துள்ளார்.

அத்துடன், வர்த்தகரை தொடர்பு கொண்டு அவரது மகன் பெற்றுக் கொண்ட போதைப்பொருளுக்கான பணத்தை செலுத்துமாறு குறித்த பெண் கோரியுள்ளார்.

இதன்போது, கிடைக்கப் பெற்ற புலனாய்வு தகவல்களுக்கமைய, பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் குறித்த சிறுவன் தடுத்து வைக்கப்பட்டிருந்த இடத்துக்கு சென்று சிறுவனை பாதுகாப்பாக மீட்டனர்.

இதனையடுத்து சிறுவனை கடத்தியதாக கூறப்படும் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்ட பெண் கிராண்ட்பாஸ் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

(அ)

# 60,000 மெற்றிக் தொன் நிலக்கரி ஏற்றிய கப்பல் வந்தடைந்தது

கொழும்பு, ஜன. 07

60000 மெற்றிக் தொன் நிலக்கரியை ஏற்றிய கப்பல் ஒன்று புத்தளம் துறைமுகத்தை வந்தடைந்தது.

நுரைச்சோலை மின்னுற்பத்தி நிலையத்துக்காக இந்த நிலக்கரி அனுப்பப்பட்டுள்ள இலங்கை நிலக்கரி நிறுவனத்தின் தலைவர் தெரிவித்தார்.

உரிய அளவு நிலக்கரி இல்லாமை காரணமாக இந்த ஆண்டு 10 மணி நேரம் வரையில் மின்வெட்டு அமுலாக்கப்பட வேண்டி ஏற்படலாம் என்று இலங்கை மின்சார சபையின் பொறியிலாளர்கள் கூறிவருகின்றனர்.

இந்த நிலையிலேயே தற்போது இந்த நிலக்கரி தொகை இலங்கை வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# போதை மாத்திரைகளுடன் ஒருவர் பொலிஸாரால் கைது

கொழும்பு, ஜன. 07

10 நாட்களுக்கு முன்னர் புனர்வாழ்வு முகாமில் இருந்து விடுவிக்கப்பட்ட சந்தேக நபரொருவர் 38 இனந்தெரியாத போதை மாத்திரைகளுடன் கைது செய்யப்பட்டதாக மொரட்டுவை பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் பொலிஸாரிடம் சந்தேகமடைந்து பதட்டமாக நடந்துகொண்டதை அடுத்து குறித்த போதைப் பொருள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் கூறினர்.

குறித்த சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப கட்ட விசாரணையின் போது, அவர் பல்லேகலை புனர்வாழ்வு முகாமில் புனர்வாழ்வளிக்கப்பட்டு, வீடு திரும்பியதன் பின்னர் பழைய துண்டுச் சீட்டை காண்பித்து இவ்வாறு மருந்தகத்தில் மாத்திரைகளை பெற்றுக்கொண்டுள்ளமை தெரியவந்துள்ளது.

(அ)

# தந்தை தாக்கியதில் மகன் உயிரிழப்பு!

கொழும்பு, ஜன. 07

மதுபோதையில் வந்து தாயை தாக்கிய மகன் தந்தையின் தாக்குதலால் உயிரிழந்துள்ளதாக அனுராதபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். தந்தையின் தாக்குதலில், 25 வயதான விநுர விரஞ்சனா என்ற இளைஞனே உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்த இளை ஞனின் வீட்டில் அவரது தந்தை, தாய் மற்றும் உடன்பிறந்தவர்களுடன் வசித்து வந்ததாகவும், 10 ஆண்டுகளுக்கு முன்பு வாகன விபத்தில் அவரது வலது கால் பகுதி அகற்றப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இறந்தவர் தினமும் குடித்துவிட்டு வந்து அவரது தாய், தந்தை மற்றும் சகோதரர்களை அடிப்பதும், சம்பவத்திற்கு முந்தைய நாள் இரவு குடித்துவிட்டு வந்து அவரது தாயை அடித்தபோது, தந்தை தலையிட்டு இளைஞரை தாக்கியதில் குறித்த இளைஞன் உயிரிழந்ததாக பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

# பொலிஸாரின் சூட்டில் ஒருவர் பலி!

கொழும்பு, ஜன. 07

ஹங்வெல்ல பிரதேசத்தில் சந்தேக நபருக்கும் பொலிஸாருக்கும் இடையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் கொலைச் சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்த நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஹங்வெல்ல உணவகம் ஒன்றின் உரிமையாளரை சுட்டுக் கொன்ற சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரே கொல்லப்பட்டார்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய மற்றொரு சந்தேகநபரை மேல் மாகாண தெற்கு குற்றத்தடுப்பு பிரிவினர் நேற்று முன் தினம் கைது செய்துள்ளனர். கொலையாளியை மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் சென்றதுடன், கொலைக்கு திட்டமிட்டவரே கைதாகினார்.

தற்போது டுபாயில் இருந்து செயற்படும் லலித் கன்னங்கர மற்றும் சாமியா என்றழைக்கப்படும் சமிந்த புத்திக ஆகியோரின் கட்டளைப்படி இந்த கொலை நடந்தது.

ஹங்வெல்ல குறுக்கு வீதியிலுள்ள உணவகத்தின் உரிமையாளர் மொஹமட் பர்ஷான் என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டார். (அ)

# சேவல் சின்னத்தில் இ.தொ.க

கொழும்பு, ஜன. 07

உள்ளாட்சிமன்ற தேர்தலில் நுவரெலியா, பதுளை, கண்டி, இரத்தினபுரி, கேகாலை, கொழும்பு, களுத்துறை மற்றும் வன்னி ஆகிய மாவட்டங்களில் போட்டியிடுவதற்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தீர்மானித்துள்ளது என தெரியவருகின்றது.

இதில் ஒரு சில மாவட்டங்களில் தனித்து சேவல் சின்னத்திலும், எஞ்சியுள்ள மாவட்டங்களில் கூட்டணியாகவும் போட்டியிட காங்கிரஸ் திட்டமிட்டுள்ளது.

காங்கிரஸின் தேசிய சபை எதிர்வரும் 17 ஆம் திகதி கூடவுள்ளது. இதன்போது இது சம்பந்தமாக இறுதி முடிவு எடுக்கப்படும்.

# புடினின் பிடிவாதத்தால் இந்தியாவுக்கு அதிகரிக்கிறதா சிக்கல்?

**ரஜ்னீஷ் குமார்**

சீனா, ரஷ்யா ஆகிய கணவன் மனைவியின் அடிமை இந்தியா என்று பாஜக தலைவர் சுப்பிரமணியன் சுவாமி குறிப்பிடுகிறார். சீனா தனது சொந்த நலன்களுக்காக எப்போதும் “’மனைவி”யைப் பயன்படுத்துகிறது என்றும், கும்பிடு போடுவதைத் தவிர, ‘அடிமை’க்கு வேறு வழியில்லை என்றும் சுவாமி கூறுகிறார்.

இப்போது பல நிபுணர்கள், உக்ரேய்ன் போரால் ரஷ்யா, சீனாவை அதிகம் சார்ந்து இருப்பதாகவும் இந்தியாவுக்கு நிலைமை மிகவும் சிக்கலானதாக மாறியுள்ளது என்றும் கருதுகிறார்கள்.

கடந்த ஆண்டு செப்டம்பரில், ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு (எஸ்சிஓ) உச்சிமாநாட்டின் போது, சீன அதிபர் ஷீ ஜின்பிங்கும் ரஷ்ய அதிபர் விளாதிமிர் புடினும் உஸ்பெகிஸ்தானில் சந்தித்தனர்.

இந்தச் சந்திப்பில், புடினை “அன்புள்ள நீண்ட கால நண்பர்” என்று ஷீ ஜின்பிங் அழைத்தார். உக்ரேய்ன் நெருக்கடி குறித்துச் சீன அதிபர் கவலை தெரிவித்ததை புடின் ஏற்றுக்கொண்டார். உக்ரேய்ன் நெருக்கடியில் சீனாவின் நடுநிலையான அணுகுமுறையை அதிபர் புடின் பாராட்டினார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோதியும் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு உச்சி மாநாட்டிற்குச் சென்றிருந்தார். அவர் புடினுடன் இருதரப்பு சந்திப்பையும் நடத்தினார். இது போர்க்காலம் அல்ல என்று பிரதமர் மோதி புடினிடம் கேமரா முன் கூறினார்.

உக்ரேய்னுடனான போரைப் பேச்சுவார்த்தை மூலம் முடிவுக்குக் கொண்டு வருமாறு இந்தியப் பிரதமர் வலியுறுத்தினார். ஆனால் சீன அதிபர் ஷீ ஜின்பிங் அப்படி எதுவும் கூறவில்லை.

உக்ரேய்ன் மற்றும் உலகின் பிற பகுதிகளில் நடந்து வரும் மோதலில், சீனா மற்றும் ரஷ்யாவின் நலன்கள் ஒன்றோடொன்று மோதுகின்றன, இருந்தாலும், இரண்டு நாடுகளும் ஒன்றுக்கொன்று ஆதரவாகவே காணப்படுகின்றன.

அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகளின் அச்சுறுத்தல் குறித்து இரு நாடுகளும் ஒருமித்த பார்வையையே கொண்டுள்ளன. தத்தம் அதிகாரங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்காகவே ஒருவருக்கொருவர் ஆதரவாக இருப்பதாகவும் கூறப்படுகிறது.

மேற்கத்திய ஜனநாயகத்தின் பெயரால் மட்டும் சர்வதேச ஒழுங்கு நிலைத்திருக்க முடியாது என்று சீனாவும் ரஷ்யாவும் கருதுகின்றன.

கடந்த ஆண்டு பிப்ரவரி 24-ம் திகதி உக்ரேய்ன் மீது தாக்குதல் நடத்த புடின் உத்தரவிட்டார். இதற்கு 20 நாட்களுக்கு முன்பு, புடின் மற்றும் ஷீ ஜின்பிங் ஓர் அறிக்கையை வெளியிட்டனர். அதில், ரஷ்யாவிற்கும் சீனாவிற்கும் இடையிலான கூட்டாண்மை, எல்லைகளுக்கு அப்பாற்பட்டது என்றும் எந்த பிரதேசமும் இதற்கு விதிவிலக்கன்று என்றும் அறிவித்தனர்.

**எல்லைகளுக்கு அப்பாற்பட்ட கூட்டாண்மையின் யதார்த்தம்**

இந்த அறிக்கைக்குப் பல அர்த்தங்கள் கற்பிக்கப்பட்டன. மேலும் ரஷ்யாவிற்கும் சீனாவிற்கும் இடையிலான நட்பு உடைக்க முடியாததாக மாறுகிறது என்று கூறப்பட்டது. “ரஷ்யா மற்றும் சீனாவின் கூட்டு எல்லைக்கு அப்பாற்பட்டது“ என்ற கருத்து சீன வெளியுறவு அமைச்சகத்திடம் இருந்து வந்தது.

மேலும் இரு நாடுகளுக்கும் இடையேயான உறவு விரிவானது என்றும், எந்தப் பிரிவும் தேவையில்லை என்றும் கூறப்பட்டது. சீனா தனது வெளியுறவுக் கொள்கையை “மூன்று இல்லைகளால்“ வரையறுக்கிறது. அவை- கூட்டணி இல்லை, மோதல் இல்லை மற்றும் மூன்றாம் தரப்பினரை இலக்காக்குவது இல்லை. இந்த மூன்று ‘இல்லை’களும் டெங் சியோபிங்கின் காலத்திலிருந்து தொடர்கின்றன.

ரஷ்யாவின் அதிகாரப்பூர்வ ஆவணங்களும் கூட்டணிக்கு எதிரான கருத்துகளையே உள்ளடக்கியுள்ளன. சீனாவுடனான கூட்டணி குறித்தும், எந்தவொரு கூட்டணிக்கு எதிராகவும் தாராளமய முறையே சரியானது என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

உக்ரேய்ன் மீதான தாக்குதலில், சீனா தனது நலன்களுக்கு ஏற்ப ரஷ்யாவை ஆதரித்துள்ளது. உக்ரேய்னுக்கு ஆயுதம் வழங்குவதன் மூலம் அமெரிக்காவும் நேட்டோவும் நெருப்புடன் விளையாடுவதாக சீன அதிகாரிகளும் அங்குள்ள ஊடகங்களும் கூறுகின்றன.

ஐக்கிய நாடுகள் சபையில் கூட சீனாவின் நிலைப்பாடு மிகவும் கண்டிப்பானது. உக்ரேய்ன் மீதான ரஷ்யாவின் தாக்குதலைக் கண்டித்து ஐ.நா.வின் இரண்டு தீர்மானங்கள் மீதான வாக்கெடுப்பைச் சீனா புறக்கணித்தது. மறுபுறம், கடந்த ஆண்டு ஏப்ரல் 7 ஆம் திகதி, ஐநா மனித உரிமைகள் கவுன்சிலில் இருந்து ரஷ்யாவை விலக்குவதற்கான வாக்கெடுப்பு நடந்தபோது, சீனா அதற்கு எதிராக வாக்களித்தது.

மறுபுறம், செப்டம்பர் 16 அன்று, உக்ரேய்னிய அதிபர் ஸெலென்ஸ்கி ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையில் உரையாற்ற அனுமதிக்கும் முன்மொழிவின் மீதான வாக்கெடுப்பிலும் சீனா கலந்து கொள்ளவில்லை. செப்டம்பர் 21 அன்று, உக்ரேய்னில் துருப்புக்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதாக புடின் அறிவித்த போது, சீன வெளியுறவு அமைச்சகம் பேச்சுவார்த்தை மூலம் நெருக்கடியைத் தீர்க்க வேண்டும் என்று கூறியது.




**ரஷ்யாவைப் பயன்படுத்திக்கொள்ளும் சீனா**

உக்ரேய்ன் நெருக்கடியில் ரஷ்யாவை சீனா பயன்படுத்திக்கொள்கிறது என்று தி அட்லாண்டிக் இதழ் குறிப்பிட்டுள்ளது. அதில், “1960 களில், சீனாவும் ரஷ்யாவும் பனிப்போரின் போது பரம எதிரிகளாக மாறியதால், மேற்கு நாடுகளை வெல்லும் வாய்ப்பை நழுவவிட்டன. உலகின் இரண்டு சக்திவாய்ந்த சர்வாதிகார ஆட்சிகள் அமெரிக்கா தலைமையிலான தாராளமய ஒழுங்கிற்கு எதிராக ஒன்று சேர்ந்துள்ளன. சீனாவின் ஆதரவுடன் ஜனநாயக நாடான உக்ரேய்ன் மீது ரஷ்யா நடத்திய தாக்குதல் தாராளவாத சர்வதேச ஒழுங்கிற்குக் கடுமையான அச்சுறுத்தலாக உள்ளது.

வரலாற்று ரீதியாக, சீனாவிற்கும் ரஷ்யாவிற்கும் இடையிலான உறவு மோதலாகவே இருந்து வந்துள்ளது. 1960 களின் பிற்பகுதியில், பனிப்போரின் போது, இரு நாடுகளுக்கும் இடையேயான பதற்றம் மிகவும் அதிகரித்து, அணு ஆயுதப் போர் வரை செல்லும் அபாயத்தை எட்டக்கூடிய நிலை கூட உருவானது.” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

தி அட்லாண்டிக் அறிக்கையில் மேலும்,“இருப்பினும், இரு நாடுகளும் இப்போது பரஸ்பர நலன்களுக்காக ஒன்றிணைந்துள்ளன. இருவருக்கும் இடையே பொருளாதார ரீதியாக வளரும் வர்த்தகம் பரஸ்பர நன்மை பயக்கும். சீனாவிற்கு, எண்ணெய், எரிவாயு, நிலக்கரி மற்றும் பிற மூலப்பொருட்கள் மூலம் தன் தொழிலின் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டும், இது ரஷ்யாவால் வழங்கப்படுகிறது. புடினும் ஷீ ஜின்பிங்கும் நெருங்கிய நண்பர்களாகக் காணப்படுகின்றனர்.

2019 இல், ஷீ ஜின்பிங் புடினைச் சிறந்த நண்பர் என்று அழைத்தார். இருவரும் அமெரிக்காவின் உலகளாவிய அந்தஸ்தினால் எரிச்சலடைந்துள்ளனர். இருவருமே தங்களது உலகளாவிய நோக்கத்தில் அமெரிக்காவை மிகப்பெரிய தடையாக கருதுகின்றனர். மேற்குலகின் மேலாதிக்கம் ஆசியாவிலும் ஐரோப்பாவிலும் நீடிக்குமா என்ற அச்சம் அதிகரித்து வருகிறது.

பொருளாதாரத் தடைகள் மூலம் ரஷ்யாவைத் தனிமைப்படுத்த மேற்கு நாடுகள் கடுமையாக முயன் றன, ஆனால் சீனாவுடனான வர்த்தகம் அதிகரித்து வருவதால், அது பெரிய விளைவை ஏற்படுத்தவில்லை. 2022 ஆம் ஆண்டில், சீனா மற்றும் ரஷ்யாவின் வர்த்தகம் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கு அதிகரித்து 172 பில்லியன் டாலர்களை எட்டியுள்ளது. மறுபுறம், அமெரிக்காவுடனான ரஷ்யாவின் வர்த்தகம் பாதிக்கு மேல் குறைந்துள்ளது.

கார்னகி மாஸ்கோ என்ற மதியுரையகத்தின் மூத்த சிந்தனையாளர் அலெக்சாண்டர் காபுவேவ் கூறுகிறார், “ரஷ்யா இப்போது போர்க்காலத்தில் நிதி நெருக்கடி ஏற்படாத அளவுக்கு அதிகபட்ச வருவாயைப் பெற விரும்புகிறது. ரஷ்யாவிற்கும் மேற்கத்திய நாடுகளுக்கும் இடையிலான உறவு இருதரப்பிலும் சேதமடைந்துள்ளது.

இப்போது ரஷ்யாவின் வருமான ஆதாரம் மேற்குக்குப் பதிலாகக் கிழக்கு என்றாகி விட்டது, இதிலும் சீனா மிகப்பெரிய ஆதாரமாக உருவெடுத்துள்ளது. உக்ரேய்ன் போரின் முடிவைப் பொருட்படுத்தாமல், ரஷ்யாவிற்கும் சீனாவிற்கும் இடையிலான உறவுகள் ஆழமடைந்துள்ளன.

(09ஆம் பக்கம் பார்க்க)



# புடினின் பிடிவாதத்தால்...

ஷீ மற்றும் புடின் இருவரும் அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் அவர்களின் ஆசியக் கூட்டாளிகளின் மீது தங்கள் பொருளாதாரம் சார்ந்திருப்பதைக் குறைக்க விரும்புகிறார்கள். அத்தகைய சூழ்நிலையில், இருவரும் ஒருவருக்கொருவர் முதலீடு செய்துகொள்கிறார்கள்."

**ராணுவக் கூட்டாண்மை**

சமீபத்தில் அமெரிக்காவின் கடற்படைப் போர்க் கல்லூரி மதிப்பாய்வில் ஒரு கட்டுரை வெளியிடப்பட்டது. ரஷ்யா மற்றும் சீனா இடையே ராணுவ ஒத்துழைப்பும் பெரிய அளவில் அதிகரித்து வருவதாக அது தெரிவிக்கிறது. ரஷ்ய துறைமுகத்தில் இருக்கும் அதன் போர்க்கப்பல்கள் வரை சீனா அணுகலாம் என்று அதில் கூறப்பட்டுள்ளது. இது தவிர கடலுக்குள் போர் செய்வது தொடர்பான தொழில்நுட்பத்தையும் ரஷ்யா சீனாவுக்கு வழங்க முடியும். இருவரது ஒத்துழைப்பும் இந்தியப் பெருங்கடலிலும் அதிகரிக்கலாம் என்று இந்த மதிப்பாய்வில் கூறப்பட்டுள்ளது.

ரஷ்யாவிற்கும் சீனாவிற்கும் இடையிலான நட்பு சமமானவர்களின் நட்பு அல்ல என்பது பலரின் கருத்து. இவ்வாறான நிலையில் ரஷ்யா சீனாவைச் சார்ந்து இருப்பது எந்த வகையிலும் சரியல்ல.

உக்ரேய்னுடனான போர் இழுபறியாக நடந்து வரும் விதம், ரஷ்யாவின் வல்லரசு அந்தஸ்து ஆட்டம் கண்டுள்ளதை அம்பலப்படுத்தியுள்ளதாகவும் கூறப்படுகிறது. மேற்குலகம் ரஷ்யாவைத் தனிமைப்படுத்திய விதத்தில், சீனாவை நெருங்குவதைத் தவிர அதற்கு வேறு வழியில்லை.

ரஷ்யாவிடம் இருந்து சீனா குறைந்த விலையில் எண்ணெய் பெறுகிறது. ரஷ்யாவிற்கு டாலர்களில் வணிகம் செய்வது கடினமாகிவிட்டது. இத்தகைய சூழ்நிலையில், சீன நாணயமான யுவானில் ரஷ்ய வர்த்தகம் அதிகரித்து வருகிறது. டாலர் சாம்ராஜ்யத்தை வலுவிழக்கச் செய்வதும் அதன் நாணயத்தின் பரவலை அதிகரிப்பதும் நீண்ட காலமாக சீனாவின் திட்டமாக இருந்து வருகிறது.

ரஷ்யாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான நட்புறவால் சீனா பயனடைகிறது என்று அலெக்சாண்டர் காபூவ் தி அட்லாண்டிக்கிடம் கூறியுள்ளார். கார்னகி மாஸ்கோ மதியுரையகத்தின் இயக்குநர் டிமிட்ரி ட்ரெனின், தி டிப்ளமேட்டுக்கு அளித்த பேட்டியில், "மேம்பட்ட இராணுவ தொழில்நுட்பத்தில் சீனாவை விட ரஷ்யா முன்னணியில் உள்ளது. மறுபுறம், சீனா பொருளாதார சக்தியின் முன்னணியில் உள்ளது. இரு நாடுகளுக்கும் இடையிலான எல்லைப் பிரச்சினை தீர்க்கப்பட்டு, உயர்மட்டத் தலைமையின் கீழ் ஒருவருக்கொருவர் போதுமான நம்பிக்கை உள்ளது." என்று கூறியுள்ளார்.

**இந்தியாவிற்கு அதிகரிக்கும் அபாயம்**

சீனா மற்றும் ரஷ்யாவின் நெருக்கம் இந்தியாவை எவ்வாறு பாதிக்கும்? டிமிட்ரி ட்ரெனின் அதே நேர்காணலில், "ரஷ்யாவைப் பொருத்தவரை, சீனாவைப் போலவே இந்தியாவும் கொள்கையளவில் ஒரு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த கூட்டாளியாகும். ஆனால் ரஷ்யா மற்றும் இந்தியாவின் வர்த்தகம் சீன - ரஷ்ய வர்த்தகத்தில் பத்தில் ஒரு பங்கு தான். இந்தியா அமெரிக்காவுடன் நெருங்கி வருகிறது, ரஷ்யாவுக்கு இது ஒரு பிரச்சினையாக மாறிவிடக் கூடாது. இந்தியா தனது வெளிநாட்டு உறவுகளை எந்த ஒரு நாட்டுடனும் மட்டுப்படுத்த விரும்பவில்லை."

"ரஷ்யாவிடம் இருந்து இந்தியாவுக்கு ஆயுதங்கள் வழங்குவதில் அமெரிக்காவின் தலையீடு அதிகரித்து வருகிறது. இந்தியா மற்றும் ரஷ்யா இடையேயான உறவில் இரண்டு பிரச்சனைகள் உள்ளன. முதலாவதாக, இரு நாடுகளுக்கும் இடையிலான உறவில் போதுமான நம்பிக்கை இருந்தாலும், அரசு மட்டத்தில் ஒத்துழைப்பு அதிகமாக உள்ளது. இது தனியார் துறையில் விரிவு படுத்தப்படாவிட்டால், இந்த உறவு மிகவும் பரவலாக இருக்காது. இப்போது இந்தியப் பொருளாதாரத்தின் மீது தனியார் துறையின் கட்டுப்பாட்டைப் போல் அரசிடம் இல்லை. அத்தகைய சூழ்நிலையில், இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு அதிகாரப்பூர்வ வரம்பிற்கு வெளியே வர வேண்டும். இரண்டாவது பிரச்சனை, சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையே போட்டி அதிகரித்து வருகிறது. இரு நாடுகளும் ரஷ்யா வின் நெருங்கிய பங்காளிகள் ஆனால் ரஷ்யா மத்தியஸ் தம் செய்யும் நிலையில் இல்லை.





இந்தியாவிற்கும் ரஷ்யாவிற்கும் இடையிலான இரு தரப்பு வர்த்தகம் ஏப்ரல் 2022 முதல் 27 பில்லியன் டாலராக அதிகரித்துள்ளது, ஆனால் அது முற்றிலும் ஒரு தரப்பானது. இந்த உண்மையை ரஷ்யாவுக்கான இந்திய தூதர் பவன் கபூரும் ஏற்றுக்கொண்டுள்ளார்.

கடந்த மாதம் கடைசி வாரத்தில், பவன் கபூர், ரஷ்யா - இந்தியா வர்த்தக உரையாடல் மன்றத்தில், 27 பில்லியன் டாலர்களில், இந்தியாவின் ஏற்றுமதி 2 பில்லியன் டாலர்கள் மட்டுமே என்று கூறியிருந்தார். 2021-22 நிதியாண்டில், இந்தியா மற்றும் ரஷ்யாவின் இருதரப்பு வர்த்தகம் 13 பில்லியன் டாலர்களாக இருந்தது. இந்தியாவின் எண்ணெய் மற்றும் உர இறக்குமதிகள் 13 பில்லியனில் இருந்து 27 பில்லியன் டாலர்கள் வரை மிகப்பெரிய பங்களிப்பைக் கொண்டுள்ளன. கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் உக்ரேய்ன் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தியது, அதன்பிறகு ரஷ்யாவிடம் இருந்து இந்தியா மலிவாக எண்ணெய் பெறத் தொடங்கியது.

**பலவீனமடையவுள்ள ரஷ்யா**

மனோகர் பரிக்கர் இன்ஸ்டிடியூட் பார் டிபென்ஸ் ஸ்டடீஸ் அண்ட் அனாலிசஸின் ஐரோப்பா மற்றும் யூரேசியா மையத்தின் அசோசியேட் ஃபெலோ டாக்டர் ஸ்வஸ்தி ராவ், "ரஷ்யா, உக்ரேய்ன் போரில் வெற்றி பெற்றாலும் தோல்வியடைந்தாலும் அது பலவீனமடையும் என்பது உறுதி.

ரஷ்யா எவ்வளவு பரந்து விரிந்திருக்கிறதோ, எவ்வளவு இயற்கை வளங்கள் இருக்கிறதோ, அந்த



நாட்டின் ஆட்சியும் உண்மைக்கு முற்றிலும் புறம்பாக இருக்கும் ஒருவரின் கையில்தான் இருக்கிறது. புடின் உக்ரேனைப் புண்ணாக்கிவிட்டார், இதை சீனா முழுமையாகப் பயன்படுத்திக் கொள்கிறது. ஐரோப்பா ரஷ்யாவிலிருந்து எரிசக்தி இறக்குமதியை கிட்டத்தட்ட குறைத்துவிட்டது. இத்தகைய சூழ்நிலையில், நிர்ப்பந்தத்தின் பேரில் புடின், சீனா, இந்தியா, துருக்கி ஆகிய நாடுகளுக்கு மலிவாக எண்ணெய் விற்கிறார்."

"புடினின் இந்த நிர்பந்தம் வரும் காலங்களில் இன்னும் அதிகரிக்கும். ரஷ்யா எப்போதும் சீனாவின் இளைய பங்காளியாக இருந்து வருகிறது. உக்ரேய்ன் போருக்குப் பிறகு, சீனா வலுக்கட்டாயமாக எண்ணெய் பெறும் நிலையில் ரஷ்யா வந்துவிடும். அதாவது புடின் தனது எண்ணெயைப் பாதி விலைக்கு சீனாவுக்கு கொடுப்பார்.

ரஷ்யா பொருளாதாரத்தில் நலிவடைந்து வருகிறது. ஆற்றல் உள்ளது ஆனால் வணிகத்திற்கான உள்கட்ட மைப்பு இல்லை. சீனாவும் தனது தொழில் மூலம் உற் பத்தி செய்யப்படும் பொருட்களின் ஏற்றுமதி தொடரும் வரை மட்டுமே ரஷ்யாவிடமிருந்து எண் ணெய் பெறும். ஆனால், உக்ரேய்ன் நெருக்கடியால் உருவாகி வரும் சூழ்நிலையில் இருந்து, சீனா உடனடி சாதகமாக இருந்தாலும், நீண்டகாலத்தில் நஷ்டத்தை சந்திக்கப் போகிறது என்றே தோன்றுகிறது. அமெரிக்கா வுடனான சீனாவின் இருதரப்பு வர்த்தகம் 500 பில்லியன் டாலர்களுக்கும் அதிகமாகும். சீனாவின் முக்கிய வர்த்த கப் பங்காளிகள் அமெரிக்கா மற்றும் ஐரோப்பா தான், ரஷ்யா அல்ல. சீனா ஒரு பெரும் பொருளாதார சக்தி யாக மாற விரும்பினால், அது ரஷ்யாவை நம்பியிருக்க முடியாது, மாறாக அது தனது பொருட்களை மேற்கு நாடுகளுக்கு விற்க வேண்டும்."

"உக்ரேய்ன் நெருக்கடியால் ரஷ்யாவின் பலவீனம் மற்றும் சீனாவின் மீதான தனது சார்பு ஆகியவை இந்தியாவுக்கு ஆபத்தான சூழ்நிலையாக இருக்கலாம். இந்தியாவின் மூலோபாய சுயாட்சியில் ரஷ்யா வலுவாக இருப்பது மிகவும் முக்கியம். சீனாவுடன் நெருக்கடி அதிகரிக்கும் போதெல்லாம், ரஷ்யா மூலம் இந்தியா அதைச் சமாளித்து வந்தது. இந்த விஷயத்தில், ரஷ்யாவை விட இந்தியாவுக்கு நம்பகமான துணை யாரும் இல்லை. சீனாவை நம்பியிருக்கும் ரஷ்யாவின் நிலை அதிகரித்தால், அதனால், இந்தியாவின் நலன்களைக் கவனிக்க முடியாது. மத்திய ஆசியா மற்றும் மத்திய கிழக்கில் இந்தியாவின் நலன்களுக்கு ரஷ்யா மிக முக்கியமான நாடு. பலவீனமான ரஷ்யாவால் இங்கு இந்தியாவின் நலன்களைப் பாதுகாக்க முடியாது. இனிவரும் காலம் மிகவும் சிக்கலானதாக இருக்கும். ரஷ்யா பலவீனமாகும்போது இந்தியா என்ன செய்யும் அல்லது ரஷ்யாவை எப்படிச் சமாளிக்கும் என்பதற்கு இப்போதே பதில் சொல்வது கடினம்."

"ரஷ்யாவுக்கும் சீனாவுக்கும் இடையே அதிகரித்துள்ள வர்த்தகத்தின் மிகப்பெரிய பகுதியாக எண்ணெய் உள்ளது. ஆனால் வணிகம் என்பது எண்ணெய்க்கு மட்டும் அல்ல. இந்த வர்த்தகம் மாறிய சூழ்நிலைகளின் விளைவாகும், நிரந்தரமானது அல்ல. ரஷ்யாவை எந்த அளவுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பது சீனாவுக்குத் தெரியும். ரஷ்யா பலவீனமாக இருந்தால், சீனாவுடனான அதன் பழைய போட்டியும் அதிகரிக்கும்." என்பது ஸ்வஸ்தியின் கருத்து.

ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் மத்திய-ஆசியா மற்றும் ரஷ்ய ஆய்வு மையத்தின் இணைப் பேராசிரியர் டாக்டர் ராஜன் குமார், " சீனாவை அதிகம் சார்ந்திருக்கும் பலவீனமான ரஷ்யா இந்தியாவுக்கு மிகவும் பாதகத்தை ஏற்படுத்தும். இதன் பொருள், சீனா சொல்வதை எல்லாம் ரஷ்யா ஏற்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கும், மேலும் பாகிஸ்தானை ஒத்துழைக்குமாறும் கேட்கலாம். ரஷ்யாவிலிருந்து இந்தியா எந்த வர்த்தகம் செய்தாலும் அது மத்திய ஆசியா மற்றும் ஈரான் வழியாகத்தான். ரஷ்யா வலுவாக இருக்கும் வரை மட்டுமே மத்திய ஆசியாவில் இந்தியாவின் நலன்கள் பாதுகாக்கப்படும். சர்வதேச அரங்கில் கூட இந்தியாவின் நலன்களை ரஷ்யா பாதுகாத்து வருகிறது. ரஷ்யாவின் பலவீனம் டீசுஐஊளுஇ ளுஊழுஇ பு-20 மற்றும் ருளுஊ ஆகியவற்றில் இந்தியாவின் நலன்களைப் பாதிக்கலாம். ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியா நிரந்தர உறுப்பினர் ஆவதை ரஷ்யா வெளிப்படையாக ஆதரிக்கிறது, ஆனால் சீனாவின் கட்டுப்பாட்டில் ரஷ்யா வந்தால் இது நடக்காது."

உக்ரேய்ன் மீதான ரஷ்யாவின் தாக்குதலுக்குப் பிறகு, மேற்குலகின் ஆதிக்கத்தில் உள்ள உலக ஒழுங்கு ஆபத்தில் இருப்பதாகக் கூறப்படுகிறது. தாய்வானை வலுக்கட்டாயமாக இணைக்க சீனா முயற்சித்தால், தாய்வானுடன் அமெரிக்கா நிற்கும் என அமெரிக்க அதிபர் ஜோ பைடன் தெரிவித்துள்ளார். ஐரோப்பிய ஒன்றியமும் சீனாவைத் தனது போட்டியாளர் என்று அழைக்கிறது. சீனாவை அச்சுறுத்தலாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்க வேண்டும் என்ற விவாதமும் பிரிட்டனில் நிலவி வருகிறது. இனிவரும் காலங்களில், உலக அரசியலின் படி இது மிகவும் கடினமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, மேலும் இந்தச் சிக்கலில் இருந்து இந்தியா மீள்வது எளிதானது அல்ல.

(பிபிசி)

# வங்காலை படுகொலையின் 38ஆம் ஆண்டு நினைவேந்தல்!



மன்னார், ஜன. 07

நாட்டில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்காக குரல் கொடுத்தும், உயிரிழந்த மக்களின் உடல்களை மீட்டு அடக்கம் செய்யவும் பல்வேறு மனிதாபிமான பணிகளில் ஈடுபட்டு வந்த மன்னார் வங்காலை புனித ஆனாள் ஆலய பங்குத் தந்தை அருட்பணி மேரி பஸ்ரியன் அடிகளார் கடந்த 1985 ஆம் ஆண்டு ஜனவரி 6 ஆம் திகதி இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்டார். மேலும் அவருடன் பொது மக்களும் படுகொலை செய்யப்பட்டனர்.

இந்த நிலையில், இவர்களின் 38ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று வங்காலை புனித ஆனாள் ஆலயத்தில் நினைவு கூரப்பட்டது. மன்னார் மறை மாவட்ட ஆயர் கலாநிதி மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இதன் போது படுகொலை செய்யப்பட்ட அமரர் அருட்பணி மேரி பஸ்ரியன் அடிகளாரின் உருவச்சிலைக்கு மாலை அணிவித்து சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தினர். இதன்போது, அருட்தந்தையுடன் சேர்ந்து இன்னுயிர் நீத்த உறவுகளுக்கு தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. அதனை தொடர்ந்து வங்காலை பங்குத்தந்தை அருட்பணி ஜெயபாலன் அடிகளாரின் தலைமையுரையில் அமரர் மேரி பஸ்ரியன் அடிகளாரின் குருத்துவ சமூகப் பணி வாழ்வு குறித்து எடுத்துரைக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து அருட்பணி மேரி பஸ்ரியன் அடிகளார் மற்றும் அவருடன் சேர்ந்து உயிர் நீத்தவர்களின் 38ஆவது ஆண்டு நினைவு தினத்தையொட்டி இரத்ததான நிகழ்வும் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)







# யாழ். வீரர் வியாஸ்காந்துக்கு வாழ்த்து தெரிவித்த அஸ்வின்!

யாழ்ப்பாணம், ஜன. 07

லங்கா பிறீமியர் லீக் 2022 தொடரில் யாழ்ப்பாணத்தை சேர்ந்தவரான இளம் வீரர் விஜயகாந்த் வியாஸ்காந்த் சிறப்பாக செயல்பட்டார் என்று இந்தியாவின் சகலதுறை வீரரான ரவிச்சந்திரன் அஸ்வின் பாராட்டியுள்ளார்.

தனது யூ-ரியூப் தளத்தில் பேசிய அஸ்வின், இலங்கையின் முன்னாள் கிரிக்கெட் வீரரும் தற்போதைய வர்ணனையாளருமான ரஸல் ஆர்னல்ட் மூலமாக தன்னை தொடர்பு கொள்ள விரும்பினார் என்றும் கூறினார்.

எல். பி. எல். தொடரில் யாழ்ப்பாணம் கிங்ஸ் அணிக்காக லெக் ஸ்பின்னரான வியாஸ்காந்தை, என்னைப் போலவே உயரம் கொண்டவர். பந்து வீசும் இயல்பும் கொண்டவர்.

வியாஸ்காந்த் கடந்த 2 ஆண்டுகளாக கிரிக்கெட்டில் தீவிரமாக இருந்து வருகிறார். எனினும், 2022 எல். பி. எல். தொடரில் மிகவும் சிறப்பாக செயல்படப்பட்டார். அத்துடன், வளர்ந்து வரும் வீரருக்கான விருதையும் அவர் பெற்றார்.

அவரின் எதிர்காலம் குறித்து விசாரித்தபோது, "நீண்டகாலமாக இந்தியாவுக்காக விளையாடி வரும் தன்னிடம் ஆலோசனைகளை பெற விரும்புவதாகக் கூறினார். அத்துடன், வியாஸ்காந்தின் பயணத்தை தொடர்ந்து தாம் கவனித்து வருகிறார் என்றும் அஸ்வின் கூறியுள்ளார்.

எம். ஜி. கோபாலன் தொடரின் ஒரு பகதியாக தமிழ்நாடு இலங்கையில் விளையாடியது. இந்தத் தொடரை புதுப்பிக்க பேச்சு நடக்கிறது. அப்படியானால் நான் உங்களை அங்கு சந்திப்பேன் என்று நம்புகிறேன். உங்கள் தொழில் வாழ்க்கைக்கு எனது நல்வாழ்த்துகள்", என்று இதனை தனது தனிப்பட்ட செய்தியாக வியாஸ்காந்துக்கு அஸ்வின் தெரிவித்துள்ளார்.

# 58 இலங்கையரின் புகலிட கோரிக்கை அவுஸ்திரேலியாவால் புறக்கணிப்பு!

சிட்னி, ஜன. 07

அவுஸ்திரேலியாவில் புகலிடம் கோரி விண்ணப்பித்த 58 இலங்கையர்களின் புகலிடக் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டுள்ளன என்று அவுஸ்திரேலிய உள்துறை அமைச்சகத்தின் இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த வருடம் நவம்பரில் 1600இற்கும் மேற்பட்ட புகலிடக் கோரிக்கையாளர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன என்று அவுஸ்திரேலிய உள்துறை அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது. இந்த பட்டியலில் ஐந்தாவது இடத்தில் இலங்கை உள்ளது.

நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்களில் 58 இலங்கையர்களது கோரிக்கைகளும் அடங்குகின்றன. கடந்த நவம்பரில் மொத்தம் 1,643 புகலிடக் கோரிக்கை விண்ணப்பங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று உள்துறை அலுவலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விண்ணப்ப நிராகரிப்பு பட்டியலின் முதலாவது இடத்தில் மலேசியா உள்ளதுடன், ஆறாவது இடத்தில் இந்தியா உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கல்வி tv CHANNEL-1

**07.01.2023**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | தமிழ் |
| 08.15 | தரம்-10 | வரலாறு |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | சித்திரம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | வரலாறு |

## கல்வி tv CHANNEL - 2

**07.01.2023**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | English |
| 09.45 | தரம்-03 | அழகியல் |
| 10.30 | தரம்-03 | கணிதம் |
| 11.15 | தரம்-04 | English |
| 12.30 | தரம்-04 | கணிதம் |
| 01.15 | தரம்-05 | Singalam |
| 02.00 | தரம்-05 | கணிதம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | English |
| 06.00 | தரம்-03 | அழகியல் |
| 06.45 | தரம்-03 | கணிதம் |
| 07.30 | தரம்-04 | English |
| 08.15 | தரம்-04 | கணிதம் |
| 09.00 | தரம்-05 | Singalam |
| 09.45 | தரம்-05 | கணிதம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | அழகியல் |
| 12.30 | தரம்-03 | கணிதம் |
| 01.15 | தரம்-04 | English |
| 02.00 | தரம்-04 | கணிதம் |
| 02.45 | தரம்-05 | Singalam |
| 03.30 | தரம்-05 | கணிதம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# ஜனநாயக உரிமையான தேர்தலை கேலிக்கூத்தாக மாற்றிவிடக்கூடாது



## ஹஸனலி கோரிக்கை

நிந்தவூர், ஜன. 07

**மக்களின் உன்னதமான ஜனநாயக உரிமையான தேர்தலை கேலிக்கூத்தாக மாற்றக்கூடாது என முன்னாள் இராஜாங்க அமைச்சரும் ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பின் செயலாளர் நாயகமுமான எம்.ரி. ஹஸன் அலி தெரிவித்துள்ளார்.**

உள்ளூராட்சி மன்ற தேர்தல் தொடர்பாக செயலாளர் நாயகம் ஹஸனலி விடுத்துள்ள அறிக்கையில் மேலும் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை ஏற்றுக்கொண்டதன் பின்னர் தேர்தல்களை ஒத்திவைக்கும் உள்நோக்கம் அரசுக்கு இருப்பதாக கசிந்துள்ள செய்திகள் உண்மையானால் வேட்புமனுக்களை மட்டும் இவ்வாரத்தில் ஏற்றுக்கொள்வதற்கான ஆயத்தங்களை மேற்கொள்வதானது மக்களை அலைக்கழித்து சோர்வடையவைக்கவே எனக்கொள்ளலாம். தேர்தல் ஆணையத்தையும் மக்களையும் அரசாங்கம் சரியான பாதையில் வழிநடத்தவேண்டிய பொறுப்பிலிருந்து நழுவுவதானது வேட்புமனு தாக்கலுக்கும் தேர்தலுக்கும் இடைப்பட்ட காலவரையினை தமக்கு சாதகமான வகையில் நீட்டிக்கொள்வதற்காகவே ஆகும்.

அரசுக்கு எதிராக தேர்தல்களில் களமிறங்க முன்வருபவர்களை அப்பட்டமாக அடையாளம் கண்டு கொள்வதற்கான ஒரு கைதேர்ந்த உத்தியாகவே இதனை நோக்க இடமுண்டு. வேட்பாளர்களின் ஆர்வத்தைக் குறைப்பதற்கான மறைமுகமான ஒரு திட்டமாகவும் இது நோக்கப்படலாம். வேட்பாளர்களும் வாக்காளர்களும் அரசியல் பழிவாங்குதலுக்கு உட்படுவதற்கு இந்த நீண்ட இடைவெளி இடம்வகுக்கும் என்பதை எவராலும் இலகுவாக புரிந்துகொள்ள முடியும்.

கடந்துபோன பல மாதங்களின்போது நாட்டில் எதிர்கொண்ட பல வன்முறை சம்பவங்களையும் அடக்குமுறைகளையும் பிரளயங்களையும் கண்டு கதிகலங்கி நொந்து போயிருந்த மக்கள் தங்களது உணர்வுகளை வெளிப்படுத்துவதற்காக ஆவலுடன் எதிர்பார்த்திருந்த முதலாவது சந்தர்ப்பமே இத்தேர்தலாகும். அவ்வாறான உன்னதமான ஒரு ஜனநாயக உரிமையானது ஒரு கேலிக்கூத்தாக மாற்றப்படக் கூடாது.

பலவிதமான இன்னல்களுக்கு ஆளாகி பொருளாதார வாள்வாதார சிக்கல்களால் அல்லல் பட்ட மக்கள்மீது நீண்ட இடைவெளியுள்ள தேர்தல்காலமும் இன்னுமொரு மேலதிக சுமையாக வந்து சேராமல் இருக்க இடமளிக்கக் கூடாது.

எனவே, வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்ளும் பணிகள் முடிந்தவுடன் தேர்தல் ஆணையம் அதன் சட்டத்தின் பிரகாரம் தீர்மானிக்கும் தினத்தில் தேர்தலை நடத்தாமல் ஒத்திவைக்கும் உள்நோக்கம் அரசுக்கு இருக்குமானால் வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்வதற்கான பணிகளையும்கூட அதற்கேற்றவாறு பிற்படுத்துவதே பொருத்தமாகும் என்பது எமது கசப்பான அபிப்பிராயமாகும்- என்றார் (அ-6)

# காரைதீவில் ஏழு தேர்களுடன் சிறப்பாக இடம்பெற்ற திருவாதிரை தீர்த்தோற்சவம்!

அம்பாறை, ஜன. 07

காரைதீவு இந்து சமய விருத்தி சங்கம் எல்லா வருடாவருடம் நடத்தி வரும் திருப்பள்ளி எழுச்சி திருவம்பாவை ஊர்வலத்தின் இறுதி நாளான நேற்று வெள்ளிக்கிழமை ஏழு தேர்கள் சகிதம் திருவாதிரை தீர்த்தோற்சவம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

ஏழு ஆலயங்களின் அலங்கரிக்கப்பட்ட தேர்கள் சகிதம் நடராஜர் தேர் அதிகாலை திருவெம்பாவை திருப்பள்ளியெழுச்சி ஊர்வலம் காரைதீவு ஸ்ரீகண்ணகை அம்மன் ஆலயத்திலிருந்து ஆரம்பமாகியது.

இந்த அதிகாலை ஊர்வலத்தில் நூற்றுக் கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

பத்தாம் நாள் ஊர்வலம் நேராக பாலையடி வாலவிக்னேஸ்வரர் ஆலயத்தை சென்றடைய அங்கு திருவெம்பாவை பாடப்பட்டது.

அங்கிருந்து தேரோடும் வீதி வழியாக ஊர்வலம் சகல ஆலயங்களுக்கும் சென்று இறுதியில்



சமுத்திரத்தை அடைந்தது.

அங்கு வீரபத்திரர் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ ரூபன் ஐயா விஷேட அபிஷேக பூஜை நடத்தினார். காலை 11 மணியளவில் சமுத்திரத்திலே திருவாதிரை தீர்த்தம் இடம் பெற்றது.

சமுத்திரம் சீற்றமாக இருந்த காரணத்தால் பக்தர்கள் முழுமையாக இறங்கி நீராட அனுமதிக்கப்படவில்லை. (அ)

# நிந்தவூர் பிரதேச செயலகம் சாதனை

நிந்தவூர்,ஜன. 07

இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான அடைவுமட்டமதிப்பீட்டு திட்டத்தில் கூடிய பயனாளிகளை இணைப்புச் செய்து நிந்தவூர் பிரதேச செயலகம் தேசிய ரீதியில் முதலிடம் பெற்று சாதனைபடைத்துள்ளது.

இலங்கை சமூக பாதுகாப்பு சபையினால் குறித்த பயனாளிகளை இணைக்கும் போட்டித் திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்டத்திற்கு வழங்கப்பட்ட 3500 எனும் இலக்கில் 11801 ஆக நிந்தவூர் பிரதேச செயலகம் பயனாளிகளை இணைப்புச் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதனடிப்படையிலேயே தேசிய ரீதியாக 25 மாவட்டங்களின் தரவரிசைப்படுத்தில்ல அம்பாறை மாவட்டம் முதலிடம் பெறவும் நிந்தவூர் பிரதேச செயலகம் வழிவகுத்துள்ளது.

மேலும் தேசிய ரீதியாக முதலிடத்தைப் பெற்றுள்ள நிந்தவூர் பிரதேச செயலகம் அம்பாறை மாவட்டம் உட்பட வடக்கு கிழக்கிலும் முதலிடம் பெற்று பெருமை சேர்த்துள்ளது.

அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே. எம்.ஏ.டக்ளஸ், இந்த சாதனை மூலம் 25 மாவட்டங்களின் தரவரிசைப் படுத்தலில், அம்பாறை மாவட்டத்திற்கு முதலிடம் பெற்றுத் தந்த நிந்தவூர் பிரதேச செயலகத்தை வெகுவாகப் பாராட்டியுள்ளார்.

அரசாங்க அதிபர் டக்ளஸ் இது தொடர்பாக பாராட்டுத் தெரிவிக்கும் கடிதம் ஒன்றை, நிந்தவூர் பிரதேச செயலாளர் சட்டத்தரணி ஏ.எம்.லதீபுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

இதேவேளை இந்த தெரிவுக்கான விருது வழங்கும் நிகழ்வு எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில், இலங்கை சமூகபாதுகாப்பு சபையால் நடத்தப்படவிருப்பதாகவும். மேற்படி தரவரிசைப்படுத்தலில் தேசிய ரீதியாக மட்டக்களப்பு கோரளைப்பற்று பிரதேச செயலகம் இரண்டாம் இடத்தையும், யாழ் கோப்பாய் பிரதேச செயலகம் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளதாகவும் அறியவருகின்றது. (அ-06)



# திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துவின் 125ஆவது விழா நடைபவனி

திருமலை, ஜன. 07

திருகோணமலை ஶ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியின் 125 ஆவது ஆண்டு விழாவுக்கான நடைபவனி நேற்று முன் தினம் வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு கல்லூரியில் இருந்து ஆரம்பமாகி திருகோணமலை பிரதான வீதியின் ஊடாக வலம் வந்தது.

இந்த நடைபவனியில் தமிழர் பண்பாட்டு விழுமியங்கள் காட்சிப்படுத்தும் அம்சங்களும் இடம் பெற்றிருந்தன.

இந் நிகழ்விற்கு கல்லூரி முதல்வர் செ. பத்மசீலன் தலைமை தாக்கினார். நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா ஜகம்பத்தும் சிறப்பு விருந்தினராக திருகோணமலை நகரசபைத் தலைவர் நா. இராசநாயகம், கிழக்கு மாகாண முன்னாள் கல்வி அமைச்சர் சி. தண்டாயுதபாணி, முன்னாள் அதிபர்கள் ,ஆசிரியர்கள் பளய மாணவர்கள் மற்றும் மாணவர்கள், ஆசிரியர்கள் உட்பட பலர் கலந்து சிறப்பித்தனர். (அ)

# தமிழ்க் கட்சிகளை ஒன்றிணையக் கோரி பாண்டிருப்பில் கவன ஈர்ப்பு போராட்டம்!




அம்பாறை, ஜன. 07

ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு மீள பெற முடியாத சமஸ்டியை வலியுறுத்துவதற்கு அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளும் ஓரணியில் ஒன்றிணைய வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து நேற்று வெள்ளிக்கிழமை கல்முனை பாண்டிருப்பில் பாரிய கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழு இப் கவனயீர்ப்பு போராட்டத்தை நடத்தியது.

ஒருமித்த குரலினை உரக்கச் செல்வோம் என்ற அடிப்படையில் நேற்று வரலாற்று பிரசித்தி பெற்ற பாண்டிருப்பு திரௌபதி அம்மன் ஆலயத்தின் முன்பாக இப் போராட்டம் காலை 10 மணி முதல் 3 மணி வரை நடைபெற்றது.

போராட்டத்தில் கல்முனை மாநகர சபை உறுப்பினர் ஹென்றி மகேந்திரன் உள்ளிட்ட அரசியல் தலைவர்களின் கலந்து கொண்டார்கள்.

சிவில் அமைப்புகள், பாதிக்கப்பட்ட மக்கள், ஊடகவியலாளர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள், இளைஞர்கள் என்று பலரும் கலந்து கொண்டனர் .

அவர்கள் ஒற்றுமையை வலியுறுத்தும் வகையில் பதாதைகளை ஏந்தி அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். (அ)

# முஸ்லிம் கட்சிகள் ஒன்றிணையவேண்டும்

நிந்தவூர்,ஜன. 07



இனப்பிரச்னைக்கான தீர்வுத்திட்டம் தயாரிப்பதில் முஸ்லிம் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து செயலாற்ற முன்வரவேண்டும். இவ்வாறு ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் தலைவர் மௌலவி முபாரக் அப்துல் மஜீத் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையொன்றில்-

சிவில் அமைப்புக்களோ, பள்ளிவாசல் நிறுவனங்களோ தீர்வு திட்டம் பற்றி பேசுவது காலம் கடத்தும் செயலாகும்.

அரசாங்கம் தமிழ் அரசியல் கட்சிகளிடம்தான் தீர்வை கேட்டுள்ளதே தவிர கோயில்களிடமோ, சேர்ச்சுகளிடமோ அல்ல.

ஆகவே உடனடியாக முஸ்லிம்களை தலைவர்களாக கொண்ட கட்சிகள் ஓரிடத்தில் அமர்ந்து இது பற்றி பேச முன்வர வேண்டும் என ஐக்கிய காங்கிரஸ் கட்சி அழைப்பு விடுக்கிறது. இந்த அழைப்பை ஏற்கும் படி கட்சிகளுக்கு அழுத்தம் கொடுப்பதே பள்ளிவாசல் நிறுவனங்களின் கடமையாகும். இந்த அழைப்புக்கு செவிசாய்க்காத கட்சிகளை மக்கள் தேர்தலில் ஓரம் கட்டுவது மக்கள் மீதுள்ள கடமையாகும் - என்றுள்ளது. (அ-6)



# 36 மணி நேர போர்நிறுத்தம்

## அறிவித்தார் ரஷ்ய அதிபர் புடின்

மொஸ்கோ, ஜன.07

ஒரு தலைப்பட்சமாக உக்ரைனில் 36 மணி நேர போர்நிறுத்தம் நடைமுறைப்படுத்தப்படுவதாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் அறிவித்துள்ளார்.

நேற்று நண்பகல் தொடக்கம் இன்று நள்ளிரவு வரையில் போர்நிறுத்தம் நடைமுறையில் இருக்கும் என்று அவர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக ரஷ்யா வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யா மற்றும் உக்ரைன் ஆகிய இரண்டு நாடுகளிலும் கொண்டாடப்படும் ஆர்தடாக்ஸ் கிறிஸ்மஸ் பண்டிகை காரணமாக போர் நிறுத்தம் தற்காலிகமாக 2 நாட்கள் அமல்படுத்தப்படுவதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(அ)

# ஆப்கானில் இளவரசர் ஹரி 25 பேரைக் கொன்றுள்ளார்!

## பிரித்தானிய ஊடகங்கள் தகவல்



லண்டன், ஜன.07

இளவரசர் ஹரி ஆப்கானிஸ்தானில் அப்பாச்சி ஹெலிகொப்டர் விமானியாக இருந்த காலத்தில் 25 பேரைக் கொன்றதை ஒப்புக்கொண்டதாக பிரித்தானிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

விரைவில் வெளியிடப்படவிருக்கும் ‘ஸ்பேர்’ என்ற அவரது சுயசரிதையை மேற்கோள் காட்டி இந்த செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த 2007-2008 வரையிலான வான்வழித் தாக்குதல்களில் முதலில் ஆப்கானிஸ்தானில் முன்னோக்கி விமானக் கட்டுப்பாட்டாளராகப் பணியாற்றிய அவர், 2012-2013ஆம் ஆண்டுகளுக்கு இடையில் தாக்குதல் ஹெலிகொப்டரை ஓட்டினார்.

38 வயதான அவர் விமானியாக ஆறு பயணங்களை மேற்கொண்டார், அது மனித உயிர்களை எடுக்க வழி வகுத்தது என்று டெய்லி டெலிகிராப் தெரிவித்துள்ளது.

அவ்வாறு செய்வதில் தனக்கு பெருமையும் இல்லை, வெட்கமும் இல்லை என குறிப்பிட்ட ஹரி, ஒரு பலகையில் இருந்து செஸ் துண்டுகளை அகற்றுவது போல் இலக்குகளை நீக்குவது என விபரித்தார்.

‘எனது எண் 25. இது எனக்கு திருப்தியைத் தரும் எண் அல்ல, ஆனால் அது என்னை சங்கடப்படுத்தவும் இல்லை’ என்று அவர் எழுதினார்.

அவரது அப்பாச்சி ஹெலிகொப்டரின் மூக்கில் பொருத்தப்பட்ட வீடியோ கேமராக்கள், அவரது பணிகளை மதிப்பீடு செய்ய உதவியது. மேலும் அவர் எத்தனை பேரைக் கொன்றார் என்பதை உறுதியாகக் கண்டறிய முடிந்தது.(அ)

# ரஷ்யாவின் போர் நிறுத்தத்தை நாம் ஒருபோதும் ஏற்கமுடியாது

## உக்ரைன் அதிரடி அறிவிப்பு

கீவ், ஜன.07

ரஷ்யா அறிவித்துள்ள தற்காலிக போர் நிறுத்தத்தை ஏற்க முடியாது என உக்ரைன் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்நாட்டு ஜனாதிபதியின் ஆலோசகர் மைக்கைலோ போடாலியா கூறியதாவது:

உக்ரைனில் ரஷியா பிடித்து உள்ள பகுதிகளை விட்டு முதலில் வெளியேற வேண்டும்.

அப்போது தான் அது தற்காலிக போர் நிறுத்தமாக இருக்கும். போர் முடிவு பிரகடனம் ரஷியாவின் தந்திரமாகும்.

போரை முடிவுக்கு கொண்டு வருவதில் எங்களுக்கு விருப்பம் இல்லை. ரஷியாவின் சூழ்ச்சி முயற்சிக்கு பதில் அளிக்க வேண்டியது இல்லை- என்றார். (அ)





# பீஜிங் மருத்துவமனைகளில் படுக்கைகளுக்கு தட்டுப்பாடு

பீஜிங், ஜன.07

சீனாவில் கொரோனா தொற்று அதிகரித்துள்ள நிலையில், பீஜிங் மருத்துவமனைகளில் படுக்கைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்தநிலையில் கொரோனா மரணங்கள் குறித்த சரியான தகவல்களை சீனா சுகாதாரத் துறை வெளியிடாதது குறித்து உலக சுகாதார அமைப்பு கவலை தெரிவித்துள்ளது.

ஆனால் சீன வெளியுறவு சுகாதாரத்துறை செய்தித் தொடர்பாளர் உடனுக்குடன் அனைத்து தகவல்களும் உலக சுகாதார அமைப்பிற்கு அனுப்பி வைக்கப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

இதுவரை 5 ஆயிரத்து 259 பேர் கொரோனாவினால் நான்காவது அலையினால் உயிரிழந்துள்ளதாக சீன அரசாங்கம் அறிவித்துள்ளது.


எனினும், தினசரி ஆயிரக்கணக்கில் பாதிக்கப்பட்டவர்கள் இறப்பதாக ஊடகத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

# 20 கோடி ருவிட்டர் பயனர்களின் பிரத்தியேக விவரங்கள் திருட்டு

நியூயோர்க், ஜன.07

20 கோடி ருவிட்டர் பயனாளர்களின் விபரங்கள் திருடப்பட்டுள்ளதாக இஸ்ரேல் இணையத்தள கண்காணிப்பு நிறுவனமான ஹெட்சன்ரொக் என்ற நிறுவனத்தின் துணை நிறுவனர் அலன்கால் தெரிவித்துள்ளார்.

20 கோடி ருவிட்டர் பயனாளர்களின் இ-மெயில் முகவரிகள் மற்றும் தொலைபேசி எண்களும் திருடப்பட்டுள்ளதாக கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. 2021ஆம் ஆண்டிலேயே இது நடந்து இருக்கலாம் என நினைக்கி றேன். ருவிட்டர் நிறுவனத்தை எலான் மஸ்க் வாங்குவதற்கு முன்பு இது நடந்துள்ளது. ஆனால் இதன் பின்னணியில் உள்ள ஹெக்கர்களின் இருப்பிடம் குறித்தோ இந்த செயலில் ஈடுபட்டது யார்? என்பது குறித்தோம் எந்த தகவலும் இல்லை.




இதனை விசாரிக்கவும், சரி செய்யவும் ட்விட்டர் நிறுவனம் என்ன நடவடிக்கை எடுத்தது என்பது குறித்து எந்த தெளிவான விளக்கங்களும் இல்லை. எனத் தெரிவித்தார்.

ஹக்கர்கள் மூலம் பலரது அந்தரங்க தகவல்களும் திருடப்பட்டு இருக்கலாம் என சந்தேகம் எழுந்துள்ளது. இதனால் ருவிட்டர் பயனாளர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். (அ)

# கிம்மின் குழந்தைகளில் ஒருவர் நாட்டை ஆள்வதற்கான வாய்ப்பு

## தென்கொரியா கணிப்பு



சியோல், ஜன.07

வட கொரியத் தலைவர் கிம் ஜோங் உன் சமீபத்திய பொது நிகழ்வுகளில் தனது இளம் மகளை உலகிற்கு காண்பிப்பது அவரது குழந்தைகளில் ஒருவர் தலைமைப் பதவியைப் பெறுவார் என்பதை மக்களுக்குக் காட்டுவதற்கான முயற்சியாக இருக்கலாம் என தென்கொரியா கூறியுள்ளது.

கடந்த சில மாதங்களில், பாலிஸ்டிக் ஏவுகணை ஏவுதளம், வட கொரிய ஆயுத விஞ்ஞானிகளுடன் புகைப்பட அமர்வு மற்றும் ஏவுகணை சேமிப்பு வசதிக்கான சுற்றுப்பயணம் ஆகிய மூன்று நிகழ்வுகளுக்கு கிம் தனது மகளை அழைத்துச் செல்லும் புகைப்படம் எடுக்கப்பட்டது.

வட கொரியாவின் அரசு செய்தி ஊடகம் கிம்மின் மகளுக்கு மிகப் பிரியமான குழந்தை என குறிப்பிட்டது. அவருக்கு ஒன்பது அல்லது 10 வயதாக இருப்பதாக நம்பப்படுகின்றது.

மூடிய கதவு பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில், தென் கொரியாவின் தேசிய புலனாய்வு சேவை, தனது மகளை பொது இடங்களுக்கு அழைத்துச் செல்வதன் மூலம், கிம் தனது குடும்பத்திற்குள் மற்றொரு சுற்று பரம்பரை அதிகார மாற்றங்களை நடத்த வட கொரியர்களுக்கு தனது உறுதியைக் காட்ட விரும்புவதாக நம்புவதாகக் கூறியது.

கிம்முக்கு 2010, 2013 மற்றும் 2017 ஆகிய ஆண்டுகளில் பிறந்த மூன்று குழந்தைகள் இருப்பதாகவும், முதல் குழந்தை ஒரு மகன் என்றும் மூன்றாவது குழந்தை ஒரு மகள் என்றும் தென் கொரிய செய்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

நாளை ஞாயிற்றுக்கிழமை 39 வயதாகும் கிம் ஜோங் உன், 1948ஆம் ஆண்டு நிறுவப்பட்டதிலிருந்து வட கொரியாவை தொடர்ச்சியாக ஆட்சி செய்து வரும் அவரது குடும்பத்தின் மூன்றாவது தலைமுறை ஆவார். தனது தந்தை கிம் ஜோங் இல் டிசெம்பர் 2011இல் இறந்தவுடன் அவரிடமிருந்து அதிகாரத்தைப் பெற்றார். கிம் ஜோங் இல்லின் தந்தையும் மாநில நிறுவனருமான கிம் இல் சுங் 1994 இல் இறந்தபோது கிம் ஜோங் இல் பொறுப்பேற்றார். (அ)

# இந்தியாவுடனான ரி - 20 இலங்கை அபார வெற்றி!



புனே, ஜன. 07

இந்தியாவுக்கு எதிராக புனே விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் நடந்த இரண்டாவது இருபது 20 கிரிக்கெட் போட்டியில் 16 ஓட்டங்களால் இலங்கை வெற்றி பெற்றது. இந்த வெற்றியால் 3 போட்டிகள் கொண்ட தொடர் 1 - 1 என சமப்பட்டுள்ளது.

தசுன் சானகவின் அதிவேக அரைச்சதமும், சாதுரியமான பந்துவீச்சும் இதேபோன்று, குசல் மெண்டிஸின் அரைச்சதமும் வெற்றிக்கு பெரிதும் துணை நின்றன.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை 20 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து 206 ஓட்டங்களைப் பெற்றது.

குசல் பெரேரா, அணித் தலைவர் தசுன் சானக ஆகிய இருவரும் அரைச் சதம் குவித்ததன் பலனாக இந்தியாவுக்கு எதிரான சர்வதேச இருபது 20 கிரிக்கெட் போட்டியில் இரண்டாவது அதிகூடிய மொத்த எண்ணிக்கையை இலங்கை குவித்தது.

நேற்றைய இரண்டாவது போட்டியில் பெத்தும் நிசங்க, குசல் மெண்டிஸ் ஆகிய இருவரும் அதிரடியாக துடுப்பெடுத்தாடி 50 பந்துகளில் 80 ஓட்டங்களைக் குவித்து இலங்கைக்கு சிறந்த ஆரம்பத்தை இட்டுக் கொடுத்தனர்.

தனது 51ஆவது சர்வதேச இருபது 20 கிரிக்கெட் போட்டியில் விளையாடும் குசல் மெண்டிஸ் அபாரமாகத் துடுப்பெடுத்தாடி 11ஆவது அரைச் சதத்தைப் பூர்த்தி செய்தார். 31 பந்துகளை எதிர்கொண்ட குசல் மெண்டிஸ் 4 சிக்ஸர்கள், 3 பௌண்ட்ரிகள் அடங்கலாக 52 ஓட்டங்களைக் குவித்தார்.

அவரைத் தொடர்ந்து பானுக ராஜபக்ஷ (2), பதும் நிசங்க (33), தனஞ்சய டி சில்வா (3) ஆகிய மூவரும் சீரான இடைவெளியில் ஆட்டமிழந்தனர். 19 பந்துகளை எதிர்கொண்டு 4 சிக்ஸர்களுடன் 37 ஓட்டங்களைக் குவித்த சரித் அசலங்க அணிக்கு சற்று உற்சாகத்தைக் கொடுத்தார்.

ஆனால், அவரும் வனிந்து ஹசரங்கவும் (0) அடுத்தடுத்த பந்துகளில் ஆட்டமிழந்தனர். (138 - 6 விக்.)

எனினும், அணித் தலைவர் தசுன் சானக அற்புதமாகத் துடுப்பெடுத்தாடி 22 பந்துகளில் 6 சிக்ஸர்கள், 2 பௌண்ட்ரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காமல் 56 ஓட்டங்களை விளாசி அணியின் மொத்த எண்ணிக்கை 200 ஓட்டங்களைக் கடக்க உதவினார்.

அவரும் சாமிக கருணாரட்னவும் பிரிக்கப்படாத 7ஆவது விக்கெட்டுக்காக 24 பந்துகளில் 68 ஓட்டங்களைப் பகிர்ந்தனர். சாமிக கருணாரட்ன 11 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார்.

இந்திய பந்துவீச்சில் உம்ரன் மாலிக் 48 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் அக்சார் பட்டேல் 24 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

இலங்கை நிர்ணயித்த 207 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இந்தியா, 20 ஓவர்களில் 8 விக்கெட்களை இழந்து 190 ஓட்டங்களைப் பெற்று தோல்வி அடைந்தது.

தசுன் சானக கடைசி ஓவரை மிகவும் சாதுரியமாக வீசி 4 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து 2 விக்கெட்களைக் கைப்பற்றி இலங்கையின் வெற்றியை உறுதிசெய்தார்.

இஷான் கிஷன் (2), ஷுப்மான் கில் (5), ராகுல் த்ரிபதி (5), ஹார்திக் பாண்ட்யா (12), தீபக் ஹூடா (9) ஆகிய ஐவரும் ஆட்டமிழக்க 10ஆவது ஓவரில் இந்தியாவின் மொத்த எண்ணிக்கை 57 ஓட்டங்களாக இருந்தது.

ஆனால், அதன் பின்னர் சூரியகுமார் யாதவ், அக்சர் பட்டேல் ஆகிய இருவரும் அதிரடியாக துடுப்பெடுத்தாடி 40 பந்துகளில் 91 ஓட்டங்களைப் பகிர்ந்து இந்தியாவுக்கு தெம்பூட்டினர்.

சூரியகுமார் யாதவ் 36 பந்துகளில் 3 சிக்ஸர்கள், 3 பௌண்ட்ரிகள் அடங்கலாக 51 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். (148 - 6 விக்.)

அதனைத் தொடர்ந்து அக்சர் பட்டேல், ஷிவம் மாவி ஆகிய இருவரும் 7ஆவது விக்கெட்டில் 41 ஓட்டங்களைப் பகிர்ந்திருந்தபோது அக்சர் பட்டேல் 51 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இந்தியாவை அண்மித்து வந்த வெற்றி வெகுதூரத்துக்கு சென்றுவிட்டது.

அக்சர் பட்டேல் 31 பந்துகளை எதிர்கொண்டு 6 சிக்ஸர்கள், 3 பௌண்ட்ரிகளுடன் 65 ஓட்டங்களைப் பெற்றார். ஷிவம் மாவியும் திறமையாகத் துடுப்பெடுத்தாடி 26 ஓட்டங்களைப் பெற்று கடைசி பந்தில் ஆட்டமிழந்தார்.

இலங்கை பந்துவீச்சில் தசுன் சானகவைவிட கசுன் ராஜித 22 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் டில்ஷான் மதுஷங்க 45 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் வீழ்த்தினர். (ஐ)

# ஒருநாள் போட்டி தொடருக்கான பாகிஸ்தான் அணி அறிவிப்பு!




கராச்சி, ஜன. 07

பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணி அங்கு 2 டெஸ்ட், 3 ஒருநாள் போட்டிகளில் ஆடுகிறது. இதில் முதலாவதாக டெஸ்ட் தொடர் நடைபெற்று வருகிறது.

இந்த இரு அணிகளுக்கும் இடையிலான ஒருநாள் தொடர் நாளை மறுதினம் ஆரம்பமாக வுள்ளது.

இந்த நிலையில், நியூசிலாந்து அணிக்கு எதிரான ஒருநாள் போட்டிக்கான பாகிஸ்தான் அணி நேற்று அறிவிக்கப்பட்டது.

இந்த தொடரில் அந்த அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் ஷாகின் ஷா அப்ரிடி இடம் பெறவில்லை. பாபர் அஸாம் தலைமையிலான அணியில் டெஸ்ட் தொடரில் ஓரங்கட்டப்பட்ட ரிஸ்வான் முதன்மை விக்கெட் காப்பாளராக தெரிவு செய்யப்படுள்ளார்.

பாகிஸ்தான் அணி விவரம் - பாபர் அஸாம் (தலைவர்), பக்கார் ஷமான், ஹாரிஸ் ராப், ஹாரிஸ் சோஹைல், இமாம் உல் ஹக், கம்ரான் குலாம், முகமது ஹஸ்னைன், முகமது நவாஸ், முகமது ரிஸ்வான் (விக்கெட் காப்பாளர்), முகமது வாசிம் ஜூனியர், நசீம் ஷா, சல்மான் ஆஹா, ஷாநாவாஸ் தஹானி, ஷான் மசூத், தயாப் தாஹீர், உசாமா மிர்.



# மெஸ்ஸி - ரொனால்டோ மீண்டும் பலப்பரீட்சை!

சென்னை, ஜன. 07


உதைபந்தாட்ட உலகின் எந்நேரமும் சிறந்த வீரர்களில் ஆர்ஜென்ரீனாவின் மெஸ்ஸியும், போர்த்துக்கல்லின் ரொனால்டோவும் நிச்சயம் இருப்பார்கள். இந்தச் சூழலில் இருவரும் மீண்டும் நேருக்கு நேர் பலப்பரீட்சை செய்யும் வாய்ப்பு அமைந்துள்ளது. இருவரும் தங்கள் கழக அணிக்காக ஒரே போட்டியில் எதிரெதிராக விளையாடும் வாய்ப்பு அமைந்துள்ளது.

மெஸ்ஸி, பிரான்ஸ் நாட்டை சேர்ந்த பாரிஸ் சென் ஜெர்மைன் (பி. எஸ். ஜி.) கழக அணிக்காக விளையாடி வருகிறார். ரொனால்டோ, சவூதி அரேபியாவை சேர்ந்த அல்-நசர் கழக அணியில் இணைந்துள்ளார். அவர் அந்த அணிக்காக விளையாட இருந்த முதல் போட்டி மழையால் இரத்து செய்யப்பட்டுள்ளதாக தகவல்.

இந்த சூழலில் பி. எஸ். ஜி. அணி, சவூதியில் அல்-நசர் அணியுடன் விளையாட உள்ளதாக தகவல். அதுவும் இது நடப்பு மாதமான ஜனவரியில் நடக்க உள்ளதாகவும் சொல்லப்படுகிறது. கடந்த ஆண்டு ஜனவரியில் பி. எஸ். ஜி. அணி சவுதியில் அல்-நசருடன் நட்பு ரீதியிலான போட்டியில் விளையாடி இருக்க வேண்டும். ஆனால், கொரோனா தொற்று பரவல் காரணமாக அது தள்ளிப்போனது.

இந்த நிலையில், ஒப்பந்தத்தின்படி பி. எஸ். ஜி. அணி தள்ளிப்போன அந்தப் போட்டியில் இப்போது விளையாட உள்ளதாம். அதனால் பி. எஸ். ஜி., அல்-நசருடன் விளையாடினால் மெஸ்ஸியும், ரொனால்டோவும் நேருக்கு நேராக பலப்பரீட்சை செய்து விளையாடும் வாய்ப்பு அமைந்துள்ளது. பி. எஸ். ஜி. அணியில் மெஸ்ஸி மட்டுமல்லாது நெய்மர், எம்பாப்பே, ஹக்கிமி போன்ற நட்சத்திர வீரர்கள் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஆஸி. - தென்னாபிரிக்கா டெஸ்ட் மழையால் பாதிப்பு



சிட்னி, ஜன. 07


அவுஸ்திரேலியா - தென்னாபிரிக்கா அணிகள் மோதும் மூன்றாவது டெஸ்ட் போட்டி நேற்று முழுமையாக மழையால் பாதிக்கப்பட்டது.

அவுஸ்திரேலியா சென்றுள்ள தென்னாபிரிக்க அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றது. முதல் இரு போட்டிகளையும் அவுஸ்திரேலிய அணி வெற்றி பெற்றுள்ளது.

இந்நிலையில், கடந்த புதன்கிழமை சிட்னியில் ஆரம்பமான போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 4 விக்கெட்கள் இழப்புக்கு 475 ஓட்டங்களை குவித்தது.

இதில், ஸ்ரீவன் ஸ்மித் 104 ஓட்டங்களை குவித்து ஆட்டமிழந்தார். உஸ்மான் கவாஜா ஆட்டமிழக்காமல் 195 ஓட்டங்களைப் பெற்றுள்ளார்.

இந்நிலையில், நேற்று நடைபெறவிருந்த மூன்றாம் நாள் ஆட்டம் மழை காரணமாக முழுமையாக நடைபெறவில்லை. இந்நிலையில், நான்காம் நாள் ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது. (ஐ)



(படம் : ஐ.சிவசாந்தன்)

# நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் மார்கழி திருவாதிரை உற்சவம்!

யாழ்ப்பாணம், ஜன. 07

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மார்கழி திருவா திரை உற்சவம் நேற்று வெள் ளிக்கிழமை காலை இடம்பெற் றது.

காலை 6.45 வசந்த மண் டபப் பூசை நடைபெற்று முரு கப்பெருமான் வள்ளி தெய் வானை சமேதரராக உள்வீதி வலம் வந்ததைத் தொடர்ந்து காலை 7.30 மணிக்கு வெளி வீதியில் எழுந்தருளினார். (அ)

# மருந்துகள் தட்டுப்பாடு காரணமாக 10,000 புற்றுநோயாளர்கள் ஆபத்தில்!

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டு



கொழும்பு, ஜன. 07

15 முக்கிய புற்றுநோய் மருந்துகளுக்கான தட்டுப்பாடு காரணமாக 10 ஆயிரம் புற்றுநோயாளர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜயந்த பண்டார இதனைத் தெரிவித்தார்.

புற்றுநோயாளிகளுக்கு 15 பிரதான மருத்துவமனைகள் சிகிச்சை அளிக்கின்றன 90 வீத மான மருந்துகளிற்கு தட்டுப் பாடு காணப்படுகின்றது என வும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

நாங்கள் சுகாதார அமைச் சுக்கு இது குறித்து அறிவித்துள் ளோம். இதனுடன் தொடர்பு பட்ட வேறு தரப்பினரும் இது குறித்து அரசாங்கத்தின் கவனத் திற்கு கொண்டுவந்துள்ளனர்.

எனினும் ஆபத்தில் சிக்குண் டுள்ள மக்களை காப்பாற்ற சுகாதார அமைச்சு எதனையும் செய்யவில்லை.

ஆரம்ப கட்டத்திலேயே கண்டுபிடித்தால் புற்றுநோயை குணப்படுத்தலாம். சிகிச்சை தாமதமானால் அது பரவும் மருத்துவர்களால் எதனையும் செய்ய முடியாது - என்றார்.

# முதலில் அரசியல்வாதிகளுக்கே புனர்வாழ்வு அளிக்க வேண்டும்!

## சரத் பொன்சேகா எம். பி.



கொழும்பு, ஜன. 07

புனர்வாழ்வு சட்டத்தை இயற்றி முதலில் அரசியல் வாதிகளுக்கு புனர்வாழ்வளிக்க வேண்டும். ஏனெனில், அரசி யல்வாதிகள்தான் நாட்டை சீரழித்துள்ளார்கள் என்று ஐக்கிய மக்கள் சக்தியில் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன் சேகா தெரிவித்தார்.

ஊழல் மோசடி அரசியல் வாதிகள் போராட்டத்திற்கு அச்சமடைந்துள்ளார்கள், போராட்டத்தின் ஊடாகவே சிறந்த அரசியல் மாற்றத்தை உருவாக்க முடியும் ஆகவே நாட்டு மக்கள் போராட்டத் துக்கு மீண்டும் உயிர் கொடுக்க வேண்டும் என்றும் கூறியுள் ளார்.

நேற்று முன்தினம் பாராளு மன்றில் உரையாற்றியபோதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் கூறியவை வரு மாறு,

புனர்வாழ்வு பணியகச் சட்டமூலம் மீதான விவாதம் இன்று (நேற்று முன்தினம்) பாராளுமன்றத்தில் இடம் பெறும் எதிர்பார்த்தேன். இருப் பினும் ஒருசில காரணிகளை குறிப்பிட்டுக் கொண்டு சட்ட மூலம் மீதான விவாதம் பிற்போடப்பட்டுள்ளது.

போதைப்பொருள் பாவ னைக்கு அடிமையானவர்க ளுக்கு கந்தகாடு புனர்வாழ்வு மத்திய நிலையத்தில் புனர் வாழ்வு வழங்கப்படுகிறது.

கந்தகாடு புனர்வாழ்வு மத்திய நிலையத்தில் போதைப் பொருள் பாவனைக்கு அடிமை யான 350 பேரை பராமரிக்க 90 இராணுவத்தினர் மாத்திரம் சேவையில் ஈடுப்படுத்தப்பட் டுள்ளார்கள். ஆகவே கந்நகாடு புனர்வாழ்வு மத்திய நிலையத் தின் ஆளணி பற்றாக்குறை காணப்படுகிறது.

போதைப்பொருள் பாவ னைக்கு அடிமையானவர்க ளுக்கு புனர்வாழ்வு வழங்கு வதற்கு அவதானம் செலுத்து வதை விடுத்து போதைப் பொருள் வியாபாரத்தை முழு மையாக இல்லாதொழிக்க கடு மையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நாட்டு மக்கள் பொருளா தார ரீதியில் பாதிக்கப்பட்டுள் ளார கள். மொத்த சனத்தொகை யில் 50 சதவீதமானோர் மூன்று வேளை உணவை இருவேளை யாக குறைத்துக் கொண்டுள் ளார்கள்.

பாடசாலைகளுக்கு கால ணிக்கு பதிலாக சாதாரண செருப்பை அணிந்துக் கொண்டு மாணவர்கள் பாடசாலைக்கு வருகை தர கல்வி அமைச்சு அனுமதி அளிக்க வேண்டும். இவ்விடயம் தொடர்பில் பாராளுமன்றத்தில் உரையாற்று மாறு மக்கள் கோரிக்கை விடுக் கும் நிலைக்கு நாடு அவலத்தை எதிர்கொண்டுள்ளது.

புனர்வாழ்வு சட்டத்தை இயற்றி முதலில் அரசியல்வாதி களுக்குத்தான் புனர்வாழ்வு வழங்க வேண்டும்,எனெனில் அரசியல்வாதிகள்தான் நாட்டை சீரழித்தார்கள்.

போராட்டத்திற்கு ஊழல் அரசியல்வாதிகள் அச்சமடைந் துள்ளார்கள். ஆகவே, நாட்டு மக்கள் போராட்டத்துக்கு மீண்டும் உயிர்கொடுக்க வேண்டும். போராட்டத்தின் ஊடாகவே சிறந்த அரசியல் கலாசாரத்தை உருவாக்க முடியும் - என்றார். (அ)



# உலக உணவுத் திட்டத்தின் கீழ் மன்னாரில் உலருணவு வழங்கல்

மன்னார், ஜன. 07

மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட போசாக்கு குறைவான மற்றும் வறிய குடும்பங்களுக்கு உலக உணவுத் திட்டம் மற்றும் வேல்ட் விஷன் இணைந்து முன்னெடுக்கும் உலர் உணவு பொருட்கள் வழங்கும் ஆரம்ப நிகழ்வு நேற்றுமுன்தினம் வியா ழக்கிழமை இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மெல் கலந்துகொண்டார்.

மாந்தை மேற்கு மற்றும் மடு பிரதேச செயலாளர்கள்,உலக உணவு திட்டத்தின் பிரதிநிதி ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர்.

மன்னார் மாவட்டத்தில் ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் 11 ஆயிரத்து 121 குடும்பங்கள் தெரிவு செய்யப் பட்டுள்ள நிலையில், முதல் கட்டமாக மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஆண்டாங்குளம் கிராம அலுவலர் பிரிவில் தெரிவு செய் யப்பட்ட 68 பயனாளிகளுக்கு குறித்த உலர் உணவு பொதிகள் வழங்கப்பட்டன.

பயனாளி ஒருவருக்கு 50 கிலோ அரிசி,5 லீற்றர் தேங் காய் எண்ணை,20 கிலோ பருப்பு ஆகியவை வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது. (அ)

# சினோபார்ம் தடுப்பூசியை இலங்கை 4ஆவது தடுப்பூசியாக பயன்படுத்தும்

கொழும்பு, ஜன. 07

சினோபார்ம் தடுப்பூசியை நான்காவது தடுப்பூசியாக பயன்படுத்த இலங்கை சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

நாட்டில் பைசர் தடுப்பூசி களுக்கு தட்டுப்பாடு ஏற்பட் டுள்ள காரணத்தினாலேயே இந்த தீர்மானம் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று மீண்டும் பரவக்கூடிய அச்சுறுத்தல் அதிகரித்துள்ளதாக எச்சரிக்கை கள் விடுக்கப்பட்டு வருகின்றது.

இந்தநிலையில் இதுவரை கொரோனா தடுப்பூசியின் பூஸ்டர் டோஸ்களை பெறாத வர்கள் சினோபார்ம் தடுப்பூசி களைப் பெறுமாறு சுகாதார அதிகாரிகள் வலியுறுத்தியுள்ள னர்.

தற்போது இலங்கையில் 1.8 மில்லியன் சினோபார்ம் தடுப் பூசி டோஸ்கள் சுகாதார அமைச்சில் இருப்பதாக இலங்கை தொற்று நோயியல் பிரிவின் புதிய தலைமை தொற்று நோயியல் நிபுணரான வைத்தியர் சமித கினிகே தெரிவித்தார்.

இலங்கையில் 18 வயதுக்கு மேற்பட்டவர்களில் ஆறு மில் லியன் பேர் இதுவரை பூஸ்டர் தடுப்பூசிகளை பெறவில்லை என் றும் அவர் குறிப்பிட்டார். (அ)

# சகல தமிழ் அரசியல் கட்சிகளும் ஓரணியில் பயணிக்கவேண்டும்!

## மன்னாரில் 2 ஆவது நாளாக கவனவீர்ப்பு

மன்னார், ஜன. 07

வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் 'ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கி ணைந்த வடக்கு-கிழக்கு மாகாணத்திற்கு மீளப் பெற முடியாத சமஷ்டியை வலியுறுத்துவதற்கு' அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளையும் ஓரணி யில் திரண்டு செயல்படக் கோரி வடக்கு-கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்களை ஒன்றிணைத்து கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

'ஒன்றிணைவோம் ஒருமித்த குரலில் உரக்கச் சொல்வோம்' எனும் தொனிப் பொருளில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 10ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை வடக்கு-கிழக்கு மாகாணங்களில் உள்ள 8 மாவட்டங் களிலும் ஒரே நேரத்தில் தொடர் கவனயீர்ப்பு போராட்டம் மேற்கொள்ளப்பட உள்ளது.

இந்த நிலையில் மன்னாரில் 2 ஆம் நாள் கவன யீர்ப்பு போராட்டம் நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் மன்னார் நகர சுற்று வட்டப் பகுதியில் ஆரம்பமானது.

வடக்கு- கிழக்கில் உள்ள சிவில் அமைப்புகள், பாதிக்கப்பட்ட மக்கள்,கல்விமான்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மற்றும் இளைஞர் கள் ஆகியோரை ஒன்றிணைத்து குறித்த கவன யீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின் றனர். வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை குறித்த போராட்டம் இடம்பெற உள்ளமை குறிப் பிடத்தக்கது. (அ)

## அடிப்படை....

படை உரிமை மீறல் மனுக்கள் பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, நீதியரசர்களான புவனேக அலுவிஹார, எல்.டி.பி. தெஹிதெனிய, முர்து பெர்னான்டோ, எஸ். துரைராஜா, ஏ.எச்.எம்.டி. நவாஸ், ஷிரான் குணரத்ன ஆகியோர் அடங்கிய ஏழு பேர் கொண்ட நீதியரசர்கள் குழாம் முன் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

உயர் நீதிமன்றம் வழக்கை நிறைவுறுத்தி அனைத்து தரப்பினரும் தமது எழுத்து மூல சமர்ப்பணங்களை கடந்த ஆண்டு ஒக்ரோபர் 5 ஆம் திகதியிலிருந்து 3 வாரங்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என அறிவித்திருந்தது. இவ்வாறான நிலையில் திகதி அறிவிப்பு இன்றி இந்த வழக்கின் தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது எதிர்வரும் 12ஆம் திகதி குறித்த மனுக்கள் மீதான தீர்ப்பு அறிவிக்கப்படவுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தற்கொலை குண்டுத் தாக்குதலில் தனது இரு பிள்ளைகளை இழந்த தந்தையான நந்தன சிறிமான்ன, சுற்றுலா துறை வர்த்தகர் ஜனக விதானகே, இரு கத்தோலிக்க மதகுருமார், ஷங்ரில்லா ஹோட்டலில் குண்டுத் தாக்குதலில் சிக்கிய சட்டத்தரணி மோதித்த ஏக்கநாயக்க, கத்தோலிக்க மதத் தலைவர்கள், இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் உள்ளிட்ட 12 பேர் இந்த அடிப்படை உரிமை மீறல் மனுக்களை தாக்கல் செய்துள்ளனர்.

இதில் பிரதிவாதிகளாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பிரதமரும் தற்போதைய ஜனாதிபதியுமான ரணில் விக்ரமசிங்க, அப்போதைய அமைச்சரவை, முன்னாள் பாதுகாப்பு செயலர் ஹேமசிறி, பொலிஸ் மா அதிபர் பூஜித், தேசிய உளவுச் சேவையின் பணிப்பாளராக இருந்த சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிலந்த ஜயவர்த்தன, தேசிய உளவுச் சேவை பிரதானியாக இருந்த சிசிர மெண்டிஸ், மற்றும் சட்ட மா அதிபர் உள்ளிட்டோர் பெயரிடப்பட்டனர்.

இந் நிலையில் குறித்த 12 மனுக்களையும் விசாரணைக்கு ஏற்பதாக கடந்த 2019 ஒக்ரோபர் 2 ஆம் திகதி உயர் நீதிமன்றம் அறிவித்தது. அது முதல் மனு மீதான விசாரணைகள் இடம்பெற்று வந்தன.

இந் நிலையில், பிரதிவாதிகளில் ஒருவராக பெயரிடப்பட்டிருந்த தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக அந்த வழக்குகளை முன்னெடுத்து செல்ல முடியாது என உயர் நீதிமன்றம் கடந்த 2022 செப்ரெம்பர் 26 ஆம் திகதி அறிவித்தது. பதவியில் இருக்கும் ஜனாதிபதிக்கு எதிராக அரசியலமைப்பின் 35 (1) உறுப்புரை பிரகாரம் வழக்கொன்றை முன்னெடுத்து செல்ல முடியாது என அறிவித்து உயர் நீதிமன்றம் அதனை அறிவித்திருந்தது.

இவ்வாறான பின்னணியிலேயே இந்த மனுக்கள் தொடர்பிலான விசாரணைகள் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட நிலையில், தீர்ப்பு எதிர்வரும் 12 ஆம் திகதி வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இனப்....

முன்னெடுக்கப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றியபோதே மேற்கண்டவாறு கூறிய அவர், மேலும் தனது உரையில்,

இனப் பிரச்னைக்கு தீர்வை வழங்குவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுகளை ஜனாதிபதி ஆரம்பித்துள்ளதை நான் வரவேற்கிறேன். இது தொடர்பில் விசமத்தனமான பிரசாரங்கள் முஸ்லிம் மக்கள் மத்தியில் கொண்டு செல்லப்படுவது கவலைக்குரிய விடயம்.

இனப் பிரச்னைக்கு தீர்வு குறித்து, தமிழ் மக்களின் அபிலாசைகள் என்பது சில சமயங்களில் முஸ்லிம்களின் அபிலாசைகளுடன் முரண்பட்ட விடயங்களாக இருக்கின்றபோது, தேவையற்ற சந்தேகங்களை குழப்பி ஒட்டுமொத்த இனப்பிச்னைக்கான தீர்வு வருகின்ற சாத்தியப்பாட்டை குறைக்க முயற்சிக்கப்படுகின்ற விடயமாக உணர்கிறேன்.

வடக்கு- கிழக்கு மாகாணங்களை ஓர் அரசியல் அலகாக ஆக்கித்தர வேண்டும் என்ற கோரிக்கை தமிழர் தரப்பிலே நீண்டகாலமாக தெரிவிக்கப்பட்ட விடயமாக உள்ளது. ஆனால், இந்த விடயத்தில் முஸ்லிம் தரப்பு சற்று மாறுப்பட்டக் கருத்தை கொண்டிருக்கின்றது என்பதை தமிழ் தரப்பு புரிந்துகொண்டிருக்கும் என நாங்கள் முழுமையாக உணர்ந்திருக்கின்றோம்.

அந்த அடிப்படையிலே இந்த விவகாரத்திலே தேவையற்ற விஷமத்தனமான பிரசாரங்களை மேற்கொள்ளாமல், அரசாங்கமோ தமிழ் தரப்போ இந்த பேச்சு முன்னெடுக்கின்றபோது இந்த விவகாரத்தில் கரிசனை உடைய ஏனைய தரப்பினரையும் இணைத்துக்கொண்டு இதற்கான தீர்வுகளை காண்பார்கள் என்பதில் நாங்கள் நம்பிக்கையுடன் இருக்கின்றோம் - என்றார். (ஐ)

## இம்மாதம்....

ரது பயண திகதிகள் இன்னும் இறுதி செய்யப்படவில்லை.

கடந்த ஆண்டு ஜூலை மாதம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியேற்ற பின்னர் ஜெய்சங்கர் இலங்கைக்கு விஜயம் செய்வது இதுவே முதல்முறையாகும். நெருக்கடியான காலகட்டத்தில், இலங்கையும் இந்தியாவும் முக்கிய ஈடுபாடுகளை மேற்கொண்டதுடன் உணவு, மருந்துகள் மற்றும் எரிபொருளை இறக்குமதி செய்வதற்கான கடன் வரி உட்பட நான்கு அம்சப் பொதியை உருவாக்கியுள்ளன. இந்தியா ஏற்கனவே 4 பில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவியை கடன்கள், கொடுப்பனவுகளை ஒத்திவைத்தல் மற்றும் நாணய மாற்று ஏற்பாடுகள் ஆகியவற்றின் அடிப்படையில் நீட்டித்துள்ளது.

இருதரப்பு உறவுகளின் ஒரு பகுதியாக, இலங்கையுடன் அதிக தொடர்பை ஏற்படுத்தவும், துறைமுகம் மற்றும் எரிசக்தி துறைகள் போன்ற துறைகளில் முதலீடு செய்யவும் இந்தியா முயன்றது.

யாழ்ப்பாணத்திற்கும் சென்னைக்கும் இடையில் விமான இணைப்பை மீண்டும் ஏற்படுத்துதல் மற்றும் இலங்கையின் வடக்கிற்கும் இந்தியாவின் தெற்கு துறைமுகங்களுக்கும் இடையில் முன்மொழியப்பட்ட படகு இணைப்புகள் இணைப்புத் திட்டங்களின் ஒரு பகுதியாகும்.

கடந்த மாதம், இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தின் இந்திய வெளிவிவகார அமைச்சின் தலைவர் புனித் அகர்வால், இலங்கைக்கு வந்து, துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து, வெளிவிவகாரம் மற்றும் மின்சாரம் மற்றும் எரிசக்திக்கு பொறுப்பான அமைச்சர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். அவருக்கு முன், இந்தியாவின் றோவின் தலைவர் சமந்த் குமார் கோயல், ஜனாதிபதி விக்ரமசிங்க உட்பட உயர்மட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டிருந்தார். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நடைமுறைத் தலைவர் பசில் ராஜபக்ஷவையும் கோயல் சந்தித்தார்.

வரவிருக்கும் பயணத்தின் போது, ஒப்புக் கொள்ளப்பட்ட பகுதிகளில் திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்து இரு தரப்பும் மதிப்பாய்வு செய்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

## உள்ளூராட்சி....

தேர்தல்கள் ஆணைக்குழுவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவசரமாக அழைத்து கலந்துரையாடியிருந்தார். இதன்போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர். ஜனாதிபதி செயலகத்தில் நடந்த இந்தக் கலந்துரையாடலில் சட்டமா அதிபரும் பங்கேற்றிருந்தார்.

இதன்போது, தேர்தலை நடத்துவதற்கான அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் இதன்போது ஜனாதிபதியை தெளிவுபடுத்தியதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்ததாக ஆணைக்குழுவின் சார்பில் பங்கேற்ற ஒருவர் தெரிவித்தார். (ஐ)

# மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 23ஆவது நினைவுதினம் அனுஷ்டிப்பு!

யாழ்ப்பாணம், ஜன. 07

மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 23ஆவது நினைவேந்தல் நேற்று யாழ்ப்பாணம் கலைத்தூது மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வின் ஆரம்பத்தில் குமார் பொன்னம்பலத்தின் திருவுருவ படத்துக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், குமார் பொன்னம்பலத்தின் புதல்வருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மலர் மாலை அணிவித்து ஈகை சுடர் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்களும், பொதுமக்களும் குமார் பொன்னம்பலத்தின் திருவுருவ படத்திற்கு மலர் மாலை அணிவித்து, மலர் தூபி அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட நுண்கலைத்துறை முன்னாள் தலைவர் கலாநிதி க. சிதம்பரநாதன் நிகழ்வில் கலந்துகொண்டு நினைவுப் பேருரையை ஆற்றியிருந்தார்.

நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன், மத குருமார்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 13ஐ முழுமையாக....

என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

முதற்கட்டமாக ஜனாதிபதியின் நிறைவேற்றதிகாரம், நிர்வாக ஏற்பாடுகளினூடாக காலத்திற்கு காலம் இல்லாமல் செய்யப்பட்ட அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு மீள கையளிக்க வேண்டும் என அவர் கூறியுள்ளார்.

காணி விடுவிப்பு மற்றும் அரசியல் கைதிகளின் விடுதலை போன்றவை நல்லெண்ணத்தினை வெளிப்படுத்துவதற்கான முயற்சிகளாக இருக்க வேண்டும்.

தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகள், அரசியல் அபிலாசைகளுக்கு தீர்வு காணும் வகையில் ஜனாதிபதிக்கும் தமிழ் தரப்புகளுக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற கலந்துரையாடல்களின் தொடர்ச்சியாக நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சந்திப்பு தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்த விடயங்களை குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் மக்களின் விவகாரங்களை தீர்ப்பதற்கான அமைச்சரவை உப குழுவின் பிரதிநிதி மற்றும் தமிழ் அரசியல் கட்சித் தலைவர் என்ற வகையில், ஜனாதிபதியின் கலந்துரையாடல்களில் இரட்டை வகிபாகத்தைக் கொண்டுள்ள தாம் கொண்டுள்ளார் என்றும். 13 ஆவது திருத்த சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதில் இருந்து ஆரம்பித்து முன்னோக்கி நகர்வதன் மூலம் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை ஈடேற்ற முடியும் எனவும் அவர் கூறினார். (ஐ)

## ஐரோப்பா....

தினருக்கு அறிவித்துள்ளார் என்று அறிய வருகிறது.

முல்லைத்தீவை சேர்ந்த இரத்னராசா சஜந்தன் (33) என்ற இளைஞனே உயிரிழந்தார் என்று கூறப்படுகின்றது. எனினும், இளைஞனின் கதி குறித்து அறிய முடியாமல் குடும்பத்தினர் திண்டாடி வருகின்றனர்.

## ஒரு....

மேலதிக சொலிசிடர் ஜெனரால் நரின் புள்ளே, தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க, உட்பட தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர், உறுப்பினர்கள் கலந்துக் கொண்டனர்.

உள்ளூராட்சிமன்ற தேர்தல் தொடர்பில் இச்சந்திப்பில் அவதானம் செலுத்தப்பட்ட போது ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் நான்கு நிலைப்பாடுகளை முன்வைத்துள்ளனர்.

தேர்தல் தொடர்பில் சுயாதீனமாக தீர்மானம் எடுக்கும் அதிகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளது. ஆகவே நான்கு நிலைப்பாடுகளை விடுத்து அனைவரும் பெரும்பான்மை தீர்மானத்துக்கு அமைய ஒரு நிலைப்பாட்டை எடுக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களிடம் அறிவுறுத்தினார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, தேர்தல்கள் ஆணைக்குழு சுயாதீனமாக செயற்படுவதற்கு தடையேதும் கிடையாது. உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பில் ஆணைக்குழு சட்டமா அதிபர் திணைக்களத்தில் ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளலாம் எனவும் ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## 2 இலட்சம்....

மன்றத் தேர்தலுக்கு வேட்புமனுத்தாக்கலை எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை ஏற்றுக்கொள்வதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

## யாழ். மாநகர....

வியை துறந்தார். ஏற்கனவே இருவர் முதல்வர்களாக பதவி வகித்து விட்ட நிலையில் மூன்றாவது முதல்வரை தெரிவு செய்ய முடியுமா என்பது தொடர்பில் குழப்பம் எழுந்தது.

முதல்வர் தெரிவை நடத்தலாம் என்று ஒரு சாராரும் நடத்த முடியாது என்று இன்னொரு சாராரும் முரண்படும் நிலையில், பதவி விலகிய வி. மணிவண்ணன் முதல்வர் தெரிவை நடத்தினால் தான் நீதிமன்றை நாடுவார் என்று கூறினார்.

இந்த விடயத்தில் - முதல்வர் தெரிவு தொடர்பில் சட்ட மா அதிபரின் ஆலோசனையை பெறவுள்ளதாக உள்ளூராட்சி ஆணையாளர் கூறியிருந்தார்.

இந்த நிலையில், மீண்டும் முதல்வர் தெரிவு நடைபெறவுள்ளதாக வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் நேற்றைய தினம் வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிட்டுள்ளார். (ஐ)

## இந்தியா,....

டுள்ளது.

2018ஆம் ஆண்டு வர்த்தக உடன்படிக்கை பேச்சுகள் இடைநிறுத்தப்பட்ட நிலையில், மூன்றாம் சுற்றுப் பேச்சை ஆரம்பிக்க தாய்லாந்தின் அதிகாரிகள் எதிர்வரும் திங்கட்கிழமை இலங்கை வரவுள்ளனர்.

இதனை சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களுக்கான இலங்கையின் தலைமை பேச்சுவார்த்தையாளர் கே. ஜே. வீரசிங்க உறுதிப்படுத்தியுள்ளார்.

இலங்கை மத்திய வங்கி தரவுகளின் படி தாய்லாந்துக்கும் இலங்கைக்கும் இடையிலான இரு தரப்பு வர்த்தகம் 2021 இல் சுமார் 46 கோடி டொலர்களாகும்.

இந்தநிலையில், 2021ஆம் ஆண்டில் இரு தரப்பு வர்த்தகத்தில் தலா 500 கோடி டொலர்களைக் கொண்ட இலங்கையின் மிகப்பெரிய வர்த்தக பங்காளிகளான இந்தியா மற்றும் சீனாவுடனான பேச்சுகள் எதிர்வரும் பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் ஆரம்பிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நாடுகளுடனான ஒப்பந்தங்கள் அனைத்தும் 2023ஆம் ஆண்டின் இறுதியில் அல்லது 2024ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் முடிக்கப்பட வேண்டும் என்பதே தமது முக்கிய குறிக்கோள் என்று கே.ஜே. வீரசிங்க தெரிவித்துள்ளார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# தேர்தல் ஆணைக்குழுவுடன் ஜனாதிபதி கலந்துரையாடல்

கொழும்பு, ஜன. 07

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்களுடன் அவசர கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

ஜனாதிபதி செயலகத்தில் இந்த கலந்துரையாடல் நடைபெற்றுள்ளது.

ஜனாதிபதி விடுத்த அழைப்பிற்கு ஏற்ப இந்த கலந்துரையாடல் இடம்பெற்றதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் கூறினார்.

இந்த கலந்துரையாடலில் சட்டமா அதிபரும் பங்குபற்றியிருந்தார்.

அரசியலமைப்பு அல்லது நீதிமன்ற நடவடிக்கை தவிர்ந்த வேறு நடவடிக்கைகள் ஊடாக உள்ளூராட்சி மன்ற தேர்தலை தடுப்பதற்கு சாத்தியமில்லை என ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளனர்.

தேர்தலை நடத்துவதற்கான அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் இதன்போது ஜனாதிபதியை தெளிவுபடுத்தியதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்தது. (அ)

# மட்டக்களப்பு மாவட்டத்திலும் வீணைச் சின்னத்தில் ஈ.பி.டி.பி

கொழும்பு, ஜன. 07

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்திலும் வீணை சின்னத்தில் போட்டியிடுவதற்கு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி(ஈ.பி.டி.பி) தீர்மானித்துள்ளது.

ஈ.பி.டி.பி. கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட முக்கியஸ்தர்களுக்கும், கட்சியின் செயலாளர் நாயகம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கும் இடையில் கொழும்பில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது

ஈ.பி.டி.பி. கட்சியின் ஊடகச் செயலாளரும், கிழக்கு பிராந்திய அமைப்பாளருமான ஸ்ராலினின் ஒருங்கிணைப்பில் இந்த கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதில், மட்டக்களப்பு மாவட்ட மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவு செய்யும் வகையிலான வேலைத் திட்டத்துடன் செயற்பட முன்வருகின்ற பல்வேறு தரப்புக்களையும் இணைத்து கொண்டு எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலை எதிர்கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மனுஷ நாணயக்காரவுக்கு எதிராக சபாநாயகரிடம் முறையிட முடிவு

கொழும்பு, ஜன. 07

தொழிலாளர் மற்றும் தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்காரவுக்கு எதிராக சபாநாயகரிடம் முறைப்பாடு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் மனுஷ நாணயக்கார கடந்த டிசெம்பர் மாதம் 22ஆம் திகதி நடைபெற்ற நிகழ்வொன்றின்போது கணக்காய்வாளர் நாயகத்தின் கடமைகளையும் கோப் குழுவின் அதிகாரங்களையும் ஆட்சேபனைக்கு உட்படுத்தி, விமர்சனங்களை முன்வைத்ததாக நாடாளுமன்ற தொடர்பாடல் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற கோப் குழு கூட்டத்தின் போது கலந்துரையாடப்பட்டதுடன், பல தீர்மானங்களும் எடுக்கப்பட்டுள்ளன.

அமைச்சர் மனுஷ நாணயக்காரவின் கருத்தானது தவறான முன்னுதாரணம் எனவும், இதனூடாக கோப் குழுவை இழிவுபடுத்துவது தெளிவாகியுள்ளதால், அது குறித்து கடும் அதிருப்தியை கோப் குழு வெளியிட்டுள்ளதுடன், கணக்காய்வாளர் நாயகமும் தனது கவலையை தெரிவித்துள்ளார். (அ)

# தமிழகத்துக்குத் தனித்து தெப்பத்தில் சென்ற புத்தர்!



சென்னை, ஜன. 07

தமிழகம் மாயவரம் என்ற அழைக்கப்படும் மயிலாடுதுறை கடற்பகுதியில் மிதந்து வந்த புத்தர் சிலை வைக்கப்பட்டிருந்த தெப்பம் ஒன்றை கடற்றொழிலாளர்கள் கரைக்கு கொண்டு சென்றுள்ளனர்.

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி மீனவர்கள் கடலில் மீன்பிடிக்க சென்றபோது, குறித்த பகுதியில் தெப்பம் ஒன்று மிதந்து வந்ததை கண்டுள்ளனர்.

அந்த தெப்பத்தை நெருங்கி சென்று பார்த்தபோது, அப்போது அந்த தெப்பத்தில் ஆட்கள் யாரும் இல்லாத நிலையில், ஒரு புத்தர் சிலை மட்டும் இருந்துள்ளது. அத்துடன் தெப்பம், மூங்கில்களை கொண்டு கட்டப்பட்டிருந்தது.

இதனையடுத்து கடலோர காவல்படையினரிடம் அங்கு வந்து ஆய்வுகளை மேற்கொண்டனர்.

இந்தநிலையில் இது இலங்கையில் இருந்து வந்ததா, அல்லது சீனாவில் இருந்து வந்ததா என்பது குறித்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (அ)

# கைதான செபால் அமரசிங்கவை விளக்கமறியலில் வைக்க உத்தரவு!

கொழும்பு, ஜன. 07

கண்டி தலதா மாளிகை மற்றும் பௌத்த மதத்தை அவதூறு செய்யும் வகையில் கருத்து வெளியிட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட செயற்பாட்டாளர் செபால் அமரசிங்க விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அவர் இன்று கொழும்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர் ஜனவரி 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அமரசிங்க நேற்று முன் தினம் பொரலஸ்கமுவவில் வைத்து குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

ஸ்ரீதலதா மாளிகை மற்றும் பௌத்த மதத்தை அவதூறு செய்தமை தொடர்பாக அவர் மீதும் ஜனக சேனாதிபதி மீதும் விசாரணைகளை ஆரம்பிக்குமாறு பொலிஸ் மா அதிபர் சிஐடிக்கு அறிவுறுத்தியதை அடுத்து அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குருநாகல் பொத்துஹெரவில் போலியான ஸ்ரீ தலதா மாளிகை நிர்மாணிக்கப்பட்டமை தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதை அடுத்து பொலிஸ் மா அதிபரின் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்க தேரர்கள் ஜனாதிபதிக்கு எழுதிய கூட்டுக் கடிதத்தில், பௌத்த மதத்தை புண்படுத்தும் வகையிலான கருத்துக்கள் அடங்கிய காணொளி காட்சிகளை சேபால அமரசிங்க சமூக வலைத்தளங்களில் பரப்பினார்.

இது பௌத்த மதத்திற்கும் வரலாற்று சிறப்புமிக்க ஸ்ரீ தலதா மாளிகைக்கும் பாதிப்பை ஏற்படுத்துவதாக தெரிவித்துள்ள மகாநாயக்க தேரர்கள், இது தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

# பம்பலப்பிட்டியில் கைக்குண்டு மீட்பு

## சந்தேகத்தில் ஒருவர் கைது

கொழும்பு, ஜன .07

பம்பலப்பிட்டி, பௌத்தலோக்க மாவத்தையில் 154 ஆம் இலக்க பஸ் தரிப்பிடத்துக் உள்ள மரமொன்றில் தொங்கிக் கொண்டிருந்த கைக்குண்டொன்றை பொலிஸார் மீட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு அளிக்கப்பட்ட தகவலுக்கு அமைய இக்கைக் குண்டு மீட்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பில் பம்பலப்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்து சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள நபர் மொரந்துடுவ பகுதியைச் சேர்ந்த 65 வயதுடையவர் எனவும், கொழும்பில் துப்புரவு தொழிலாளராக அவர் வேலை செய்வதாகவும் குறிப்பிட்ட பொலிஸார், அவரே கைக்குண்டு தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் அளித்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட குறித்த சந்தேகநபரிடம் நீண்ட விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன்போது, மொரந்துடுவ - மஹா கோனதுவ பிரதேசத்தில் இருந்து தான் தொழிலுக்கு வரும்போது, வீதிக்கு அருகில் இரும்புப் பந்து போன்ற ஒன்றைக் கண்டதாகவும், அதனை இரும்புக்கு விற்பனை செய்வதற்கு கொண்டு வந்த பின்னர், மற்றுமொரு துப்புரவுப் பணியாளர் தம்மிடம் அது கைக்குண்டு என்பதை தெரிவித்ததாகவும் சந்தேக நபர் பொலிஸாரிடம் கூறியதாக பொலிஸ் தகவல்கள் தெரிவித்தன.

அதனையடுத்தே பொலித்தீன் பையில் இட்டு அதனை மரமொன்றில் தொங்கவிட்டு பொலிஸாருக்கு தகவல் அளித்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந் நிலையில் சந்தேகநபரிடம் தொடர்ந்து விசாரணை நடத்தப்படுவதாகவும், அவசியம் ஏற்படின் பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவின் ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ளப்படும் எனவும் விசாரணைகளை கையாளும் உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறினார். (அ)

# அரியாலையில் கைகுண்டு மீட்பு

யாழ்ப்பாணம், ஜன.07

யாழ்ப்பாணம் அரியாலை பகுதியில் கைக்குண்டு ஒன்று நேற்று வெள்ளிக்கிழமை மீட்கப்பட்டுள்ளது.

அரியாலை குசவம்பலம் வீதியில் கைக்குண்டு ஒன்று காணப்படுவதாக யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்திற்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில்,பொலிஸார் நீதிமன்ற உத்தரவை பெற்று, பொலிஸ் விசேட அதிரடி படையினரின் குண்டு செயல் இழக்க செய்யும் படையணியின் உதவியுடன் செம்மணி பகுதியில் கைக்குண்டை மீட்டு செயலிழக்க செய்துள்ளனர். (அ)

# 58 இலங்கையரின் புகலிட கோரிக்கை அவுஸ்திரேலிய அரசினால் நிராகரிப்பு

கான்பரா, ஜன. 07

அவுஸ்திரேலியாவில் புகலிடம் கோரி விண்ணப்பித்த 58 இலங்கையர்களின் புகலிடக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளதாக அவுஸ்திரேலிய உள்துறை அமைச்சகத்தின் இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த வருடம் நவம்பரில் 1600-க்கும் மேற்பட்ட புகலிடக் கோரிக்கையாளர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக அவுஸ்திரேலிய உள்துறை அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது. இந்த பட்டியலில் ஐந்தாவது இடத்தில் இலங்கை உள்ளது.

நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்களில் 58 இலங்கையர்களது கோரிக்கைகளும் அடங்குகின்றன.

நவம்பர் மாதம் மொத்தம் 1,643 புகலிடக் கோரிக்கை விண்ணப்பங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக உள்துறை அலுவலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விண்ணப்ப நிராகரிப்பு பட்டியலின் முதலாவது இடத்தில் மலேசியா உள்ளதுடன், ஆறாவது இடத்தில் இந்தியா உள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 07.01.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.